# திராவிடநாடு

விலை அணா 2 ஆண்டுசந்தா ரூ 7 இலங்கை 15 சதம் மலாய்நாடு 12 காசு

மலர் 6 | 9–11–47 | இதழ் 24

## முதற் பணி

[நாடக, சினிமா, ஆசிரியர் C. A. இலட்சுமணதாஸ்]

—❀—

சில்வகை எழுத்திற் பல்வகைச் செம்பொருள்
நல்கரு முத்தமிழ் வெல்புவி அனைத்தும்
பிறங்கொளி செய்யப் பிறந்த நன் மக்காள்
திறன் மிக்கிருந்தும் சிறிது சிந்திக்கும்
செயல் மறந்துழன்ற துயரை யுள்குவீர்
நயகவிப் புலவீர் உயர்மதி உடையீர்
இருகால் உரைப்ப ஒருகால் அமுதெனும்
பெருமிதத் தொருநற் பொருள்தரு மொழியைத்
திசைதொறுஞ் சென்றுங் கிசைபவர்க்கு வந்து
வசையிலா நந்தமிழ்வ சனங்கள் புகட்டிப்
பன்மொழிகளிலும் தொன்மொழி இம்மொழி
தென்மொழி எனவும் தன்மதவாரணக்
கொடியினை உயர்த்தி முடிபற உணர்த்திக்
கடிகமழ் பூம்பைங் கொடிதமிழ்க் கன்னியை
நிலைபெற நிறுத்தி நிலைஉரு அமைத்துக்
கலைக்கடல் குழைத்துப் பலர்க்கு அளிக்க
விழைகுவீர் அயல்சேர் விழுமிய நூல்களை
மொழி பெயர்த்திடுவீர் செழுங்கிளைச் செல்வர்
இம் முதற் பணிக்குப் போமென எழுந்து
செம்மனம் கனிந்து தம் அரும் கைப்பொருள்
செலவுகள் நல்கியும் சலுகைகள் காட்டியும்
நிலையங்கள் பற்பல வலியக் கண்டடைந்து
மிகப்பெரும் பட்டினம் நகர் சிற்றூர்களில்
திகழப் பள்ளிகள் மகிழ்வொடு புதுக்கி
அறம் வளர்த்திடுமின் மறம் மடித்திடுமின்
சிறப்பொடு நற்புகழ் பெறத்தகும் பிறவும்
விதிசெயுங்குழுவு முதல் நீதி மன்றமும்
புதுவது புனைந்த மதுரச் செந்தமிழில
எழுதியும் பேசியும் முழுப்பெரும் இடத்தில்
வழுவிலாத் திருத்திஓங்கிடப் பணித்து
வாழிய நந்தமிழ் வாழிய தமிழகம்
வாழிய தமிழர் வாழிய வையகமே!

## அறிவியல் வளர்ச்சி

20-ம் பக்கத் தொடர்ச்சி

மன்னர்கள் சிரு கிருமிகளேயாவர்; அவர்கள் தயவில்தான் மனிதர்கள் வாழ்கிறார்கள் என்று நகைச்சுவை படக் கூறியுள்ளார். 'இறந்தவரை மீண்டும் உயிர்பெற்று வாழும்படிச் செய்ய முடியும்' என்ற உறுதியோடு ரஷ்யா நாட்டு அறிவியல் அறிஞர்கள் விடாமுயற்சியுடன் பாடுபட்டு, ஓரளவுக்கு வெற்றியும் பெற்று வருகிறார்கள். உயிருக்கு முடிவு ஏற்பட்டு விடுமோஎன்றுஅஞ்சிச்செய்து கொண்ட ரணசிகிச்சைகளெல்லாம் இன்று மிகமிக எளிதாகசெய்யப்படுகின்றன. அறிவியலின் பயனாக நாடோறும் வளரும் மருத்துவத்தை, நன்கு பயன்படுத்தக் கற்றுக் கொண்ட நாடுகளில் மக்கள் நல்வாழ்வு வாழ்கிறார்கள். சராசரி ஐம்பது, அறுபது ஆண்டுகளுக்கு மேல் உயிர் வாழ்கிறார்கள், அங்கெல்லாம் குழந்தைச்சாவு மிகமிகக் குறைவு. இளம் வயதில் இறப்போரின் தொகையும் மிகக்குறைவு. இவற்றிற்கெல்லாம் காரணம் அவர்கள் வாழக் கற்றுக்கொண்டிருக்கிறார்கள். வாழ வழியமைத்துக்கொடுக்கும்அறிவியல் அங்குபோற்றப்படுகின்றது. புதுமை வளர்க்கப்படுகின்றது. இங்குள்ளோர் வாழக் கற்றுக்கொள்ள வேண்டும் என்ற அக்கரை கொள்ளாத வகையில்வளர்க்கப்படுகிறார்கள். நாட்டை நடத்திச் செல்லும் துறைகளின் முன்னணியில் எப்படியோ இடந் தேடிக்கொண்டு நிற்பவர்கள் மக்கள் வாழ்வைப் பக்குவப்படுத்தித் தரும் அறிவியலைப்போற்றி வளர்க்க மறுக்கிறார்கள். எனவே, இங்கு வாழ்வு பூக்க, புதுமையொளி வீசப்படாமல் தடைப்படுத்தப்பட்ட நிலைஇருக்கிறது காலந் தாழ்க்கும் என்ற குறையேற்படுமேயொழிய புதுமையொளி வீசாமல் நின்றுவிடும் என்று அஞ்சத் தேவையில்லை. பழமை விரும்பிகள், புராணக்காரர்கள், மதத்தலைவர்கள், குருக்கள்மார்கள், புதுமையை வெறுப்பதே விவேகம் என்று கருதுவோர் விரும்பினாலும், விரும்பாவிட்டாலும், எதிர்த்தாலும் எதிர்க்காவிட்டாலும், தடுத்தாலும் தடுக்காவிட்டாலும் அறிவியல்உலகம் அவர்களை இழுத்துச் சென்றே தீரும் என்பதில் ஐயமில்லை. நமக்கு ஏற்படும் குறையெல்லாம், அறிவியல் மக்களை இழுத்துச் செல்லும்போது வேகம் மிகப்படாமல் தடைசெய்ய, முக்கியமான சிலர் இருக்கிறார்களே என்பதேயாகும்!

அறிவியலின் அவசியம், நம் நாட்டில் நன்கு உணர்த்தப்படவில்லை. அது உணர்த்தப்பட்டால்,—அதனை மக்கள் உணர்ந்தால், நம் நாடு முன்னேறும் என்பதை உலக அறிவியல் அறிஞருள் ஒருவரான சர். சி. வி. இராமன் தெளிவாக எடுத்துக் கூறியுள்ளார்.

மேனாடுகளில் அறிவியல் ஆராய்ச்சிக் கூடங்கள் (Research Institutes) எங்ஙனம் மிகவாகக் காணப்படுகின்றன. அறிவியல் ஆராய்ச்சியில் அவாக் கொண்டு, உணர்ச்சியால் உந்தப்பட்டுவிளங்கும் மாணவர்கள் ஆராய்ச்சி நடத்துவதற்கேற்ற ஆராய்ச்சிக் கூடங்கள் ஆங்காங்கு அமைக்கப்பட்டிருக்கின்றன. புத்தம் புதிய கண்டுபிடிப்புகள் நாடோறும் கண்டு பிடிக்கப்பட்டுவருகின்றன. ஆகையால்தான் மேனாடுகளில் அறிஞர் பெருகுகிறார்கள்; வாழ்க்கையின் வசதிகள் தேவைக்கேற்ற வண்ணம் பூர்த்தி செய்யப்படுகின்றன; மக்கள் இன்ப வாழ்வு நடத்த ஏது ஏற்படுகிறது. இந்திய துணைக்கண்டத்திலே மிகவும் குறைந்த அளவு ஆராய்ச்சிக் கூடங்கள்தான் இருக்கின்றன. ஏழு, எட்டுதான் இருக்கும்போல் காணப்படுகிறது. அதுவும், தென்னாட்டில் ஒன்றும் இல்லையென்றே கூறிவிடலாம். பங்களூரில்மட்டும் ஒன்று இருக்கிறது. அதை மைசூர் தனியாட்சி கண்காணித்து வருகிறது. தென்னாட்டைப் பொறுத்த வரையில் மக்கள் மூளை வலிவு உடையவர்கள் என்று பலரும் கூறக் கேட்கிறோம். அப்படியிருந்தும் வளப்பமுள்ள அறிவைப் பயன் படுத்துவதற்கேற்ற அறிவியல் ஆராய்ச்சிக் கூடங்கள் இல்லாமலிருப்பது, தென்னாட்டவரின் ஏமாந்த தன்மையைத்தான் காட்டும். நாட்டின் ஆளும் பீடத்தில் இதுவரையில் அமர்ந்திருந்தோர், இந்தத்துறையில் ஊக்கங் காட்டவில்லை. இனியேனும் ஊக்கங் காட்டும்படி ஆளவந்தார்களைத் தூண்டவேண்டிய பொறுப்பு தென்னாட்டறிஞர்களின் நீங்காக் கடமையாகும். கோவை மாநாட்டில் அறிவியல் வளர்ச்சியின் அவசியத்தை வற்புறுத்திப்பேசிய சர்.சி.வி. இராமன், தென்னாட்டவர், மத்திய அரசாங்கம் இதைச் செய்யும் என்று எதிர்பார்ப்பது தவறு என்றும், சென்னை அரசாங்கமே ஆராய்ச்சிக் கூடங்களை நிறுவப் பாடுபட வேண்டும் என்றும் கூறியுள்ளார். தென்னாடு பிறர் தயவை எதிர்பார்த்து நிற்கும் இழிநிலையை மாற்றிக்கொண்டு, தன் காலிலேயே நிற்கும் உறுதியான நிலையைப் பெற்றால் தான் வருங்காலத்தில் வாழ முடியும். வருங்கால உலகை உருவாக்கும் அறிவியல் அறிவு, நாட்டுச் சீரமைப்பு வீரர்களுக்கு ஏற்படும் நிலையை உண்டாக்க, அரசாங்கமும், அறிஞர்களும் பணிபுரிய முன்வர வேண்டும்.

●

## அறுபட்ட தொடர்பு

எலிஜிபெத் இளவரசி மணத்தின் போது இங்கிலாந்து அரசருக்கு கத்தோலிக்க கிரிஸ்துவர்களும் வாழ்த்துரை வழங்கப்போகிறார்கள். இது புது வழக்கம். 1689-ம் ஆண்டில் கத்தோலிக்கப் பரம்பரையில் வந்த இங்கிலாந்து அரசனை இரண்டாவது ஜேம்ஸ் துரத்தப்பட்ட பின்பு கத்தோலிக்கர்பாராட்டுரையைஇங்கிலாந்து மன்னர்கள் ஏற்றுக்கொள்வதுகிடையாது. இம்முறையில் 250 ஆண்டுகள் கழிந்துவிட்டன. இவ்வாறு அறுபட்ட தொடர்பை ஜார்ஜ் மன்னர் மீண்டும் ஏற்படுத்திவிட்டார்.

## அகில தமிழர் மாநாடு

இம்மாநாடு விஷயமாக, விவரம் கோரி நமது காரியாலயத்திற்கு எழுதுகிறார்கள். இதுபற்றி விவரம் தெரியவிரும்புவோர், சண்டே அப்சர்வர் காரியாலயம், சென்னை எனும் முகவரிக்கு எழுதக்கோருகிறோம்.

## திருமணம்

காரைக்குடி, சுந்தர் விலாஸ் கட்டிடத்தில், தோழர் R. M. பழனியப்பன், தோழியர் நாச்சியம்மை வாழ்க்கை ஒப்பந்தம் 27-10-47-ல் நடிகமணி D. V. நாராயணசாமி அவர்கள் தலைமையில் சிறப்புற நடை பெற்றது. தோழர்கள் T. K. சீனிவாசன், ராமசுப்பையா, S.P. வீராசாமி ஆகியோர், "சீர்திருத்தத்திருமணத்தின்" அவசியம் பற்றிச் சொற்பொழிவாற்றினர். நண்பர்களால் பரிசுகள் அளிக்கப்பட்டன.

—

உண்மை தழுவிய கற்பனை

# ★ கதிரவன் கண்ணீர்! ★

இது ஒரு மனிதனின் கதை அல்ல. கடவுளின் கதை. கடவுளின் மனைவி கதையுங்கூடத்தான். கடவுளின் கதை என்றால், நாம் காணாத, கேட்டு மட்டும் இருக்கும் புராண மல்ல. நிஜமாக நடந்தகதை.

* * *

மனிதர்களுக்கு வாழ்வும், தாழ்வும் சகஜம். சுகமும் துக்கமும் பகலும் இரவும்போல மாறிமாறித் தானே வருமென்பார்கள். குப்பை மேடு உயரும், கோபுரம் தாழும், குசேலர் குபேரராவர், குபேரர் குசேலராவர். இது சகஜம். ஆண்டவனின் திருவிளையாடல் என்பர். ஆனால் கடவுள்களின் கதி பற்றிய கதை இது!

* * *

"காத்தாயி! நாம் நேரே சூரிய பகவானிடம் போய் நமது குறையைக் கூறுவோமா" என்றார் சடையப்பர்.

"வா போகலாம் ஆனால் சூரிய பகவானுக்கு நமது குறையைக் கேட்க நேரமேது. ஓயாது ஓடிக் கொண்டிருக்க வேண்டுமே, சற்று நின்று செய்தி விசாரித்து, ஆறுதல் கூற அவருக்கு அவகாசம் இராதே" என்றாள் காத்தாயி.

"அதுவும் உண்மைதான். என்றாலும் நமது குறையை யாரிடமாவது கூறிக்கொண்டால் தான் மனம் நிம்மதியாகும்" என்று சடையப்பர்கூற, 'போய்த்தான் பார்ப்போம், வாரும்.' என்று காத்தாயி சம்மதிக்க இருவரும் கிளம்பினர்.

* * *

"ஐய்யோ! அட பாவிகளே! இது என்ன அக்கிரமம். வேண்டாமடா, நிறுத்துங்களடா. என்முகமெல்லாம் இரத்தமடா. முதுகெல்லாம் வீக்கமடா. ஆயிரக்கணக்கான பேர்வழிகளாகக் கூடிக்கொண்டு இப்படி கற்களால் அடித்து இம்சிக்கிறார்களே. ஆண்டவனே! கேட்கக்கூடாதா! இப்படியும் நடக்கவேண்டுமா"—என்று சூரியபகவான் கூறி அழுதுகொண்டிருந்தார், கண்களிலே நீர்தாரை தாரையாகப் பெருகிற்று. அந்த நீர் கீழே வீழ்ந்த பிறகே, கல்லால் அடித்த ஆயிரக்கணக்கானவர்கள் கற்களைக் கீழே போட்டு விட்டு, ரகுபதிராகவ ராஜாராம் பதிதபாவன சீதாராம்—என்று பாடி, ஆடிக்களித்தனர். தங்கள் குறையைக் கூறிக் கொள்ள வந்த காத்தாயியும் சடையப்பரும், சூரிய பகவான் அழுத கண்களுடன் நிற்பதையும், முகத்திலும் முதுகிலும் உடலிலும், கல்லடிக்காயம் இருப்பதையும் கண்டு திடுக்கிட்டு, தங்கள் விஷயத்தைக் கூறாது, முதலிலே சூரியபகவானை துக்கம் விசாரிக்கத் தொடங்கினார்கள்.

சூரிய பகவான், "சற்றேபொறுங்கள், சனியன்கள் தொலைந்தார்களா என்று பார்த்து விட்டுப் பிறகு பேசுவோம்" என்று கூறிவிட்டு, கீழே பார்த்தார். மக்கள் கும்பல் குதூகலத்துடன் போகக் கண்டு, "தொலைந்தது பீடைகள்" என்று கூறி பெருமூச்சு விட்டுக்கொண்டே தன் உடலில் இருந்த தழும்புகளைத் தடவலானார்.

* * *

"ப்ரபோ! இதென்ன கோலம். ஏன் இந்த அழுகை! இதென்ன காயங்கள்?" — என்று காத்தாயி கேட்க, சூரிய பகவான் கூறினார்.

"என் விதியை எண்ணித்தான் காத்தாயி, நான் அழுதேன். நான் அழுத பிறகுதானே அந்தப் பாவிகள் என்னை அடிப்பதை நிறுத்தினார்கள். என்ன பலமான அடி! என்ன அடி! போறாதகாலம் எனக்கு" என்று மனம் நொந்து கூறினார்.

"என்னதான் நடந்தது?" என்று சடையப்பர் கேட்டார்.

"என்ன நடந்ததா? ஏன் கேட்கிறீர்கள் அந்த வேதனையை! மகா புண்ணிய க்ஷேத்திரமாகிய காசிக்கு வந்தும் கர்மம் தொலையவில்லையே என்பார்கள். எனக்கோ காசிக்கு வந்ததாலேயே இந்தக் கர்மம் வந்தது. நான் வராமல் எப்படி இருக்க முடியும்? காசி ராமேஸ்வரம், கண்டி கதிர்காமம், ரங்கூன் சிங்கப்பூர், லண்டன் பாரிஸ், பெர்லின் பக்தாது, மாஸ்கோ, மிலான், அங்காரா, அஜோர்ஸ், நியூயார்க், ஆட்டவா, நியூஜிலந்து முதல், எந்த இடத்தைத் தான் நான் போய்க்காணாமல் இருக்கிறேன், காடுமேடுகளையும் காண்கிறேன், காதலர்கள் கொஞ்சிடும் வீட்டையும் பார்க்கிறேன், சகாரா பாலைவனத்தில் சஞ்சரிக்கிறேன், மூடு பனிப்பிரதேசங்களில் நுழைகிறேன், மன்னாதி மன்னர்களும் என் வரவை எதிர்நோக்கி நிற்கக் காண்கிறேன், மகாபாதகம் புரிவோரும் என் வரவுக்கு மகிழக் காண்கிறேன், யாரிடமும் பேதங்கொண்டு, இன்னவருக்கு இவ்வளவு என்று இராமல், எதிர்ப்பட்டோரிடம் எள்ளளவும் பாரபட்சமின்றித்தான் நடக்கிறேன். என் கடமையைச் செய்யத் தவறவேயில்லை. முதுகு வளைய மூட்டை சுமந்து செல்லும் வறியவனைக் கண்டு, அவனது காலும் தலையும் காயுமே என்று சிறிது மனதில் ஈவு இரக்கம் தோன்றிய போதிலும் நாம் என்ன செய்வது, அது அவன் விதி, அவன் மீது காய்வது நம்விதி" என்று மனதைத் திடப்படுத்திக் கொண்டு கடமையைச் செய்கிறேன். அன்ன நடை அணங்குகள் என்று ஆயிரமாயிரம் கவிகள் கூறக்கேட்டுத் தான் இருக்கிறேன், என்றாலும், அந்த மாதர்கள், கால் கொப்புளிக்க நடந்து செல்லக் காணும்போது, அவர்களின் கைக்குழந்தைகள், தவிக்கும்போது கஷ்டமாகத்தான் இருக்கிறது, ஆனாலும் நான் என்ன செய்வது, நான் தயை தாட்சணியம் காட்டுவதற்கில்லை. அச்சம் கொண்டு கடமையைச் செய்யத் தவறியதில்லை அப்படிப்பட்ட எனக்குத்தான் இந்தக்கதிவந்தது" என்றுகூறிசோகித்த சூரிய பகவானை நோக்கி, காத்தாயி, கண்ணீர் உதிர்த்து "பகவானே! உமக்குமா இந்தக்கதி வந்தது?" என்று பரிவுடன் விசாரித்தாள்.

"ஆமாம்! காத்தாயி! என் கதை கிடக்கட்டும். நீங்கள் பசியோடு இருப்பீர்களே," ஏதேனும் சாப்பிட

லாமே என்று சூரிய பகவான் கேட்டார்.

சடையப்பர், சம்பிரதாயத்துக்காக, "பசி இப்போது இல்லை. முதலிலே உமது கதையைக் கூறும்" என்றார்.

"ஆமாம், உங்களுக்கு பசி ஏன் இருக்கப்போகிறது. ஆடு கோழியும், அன்னமும், பாலும், பழமும், பட்சணமும், பக்தகோடிகள் படைக்கிறார்கள். தின்று தெகிட்டிவிட்டு இருக்கும்" என்றார் சூரியபகவான். ஆறுநாட்கள் அன்னாகாரமின்றி காத்தாயியும் சடையப்பரும் அலைந்தது அவருக்குத் தெரியாது.

* * *

இந்தக் காசி க்ஷேத்திரத்திலே, கங்கையில் மூழ்கிஎழுந்து, கைகூப்பி என்னைத் தொழுதோர் கணக்குண்டா? எனதுசெந்நிறமேனியைப் புகழ்ந்து பூசித்தவர்கள் கோடானு கோடி பேர். கண்கண்ட தெய்வமே! காசினியின் விளக்கே! காரிருளை அகற்றும் கருணாமூர்த்தி! என்று கவிதைகள் பாடுவோர் எவ்வளவோ பேர். அப்படிப்பட்ட கங்கைதான் இது!

அவ்விதமாக வெல்லாம் பூஜித்து வந்த புண்ணிய க்ஷேத்திரத்தில்தான் அதே பக்த கோடிகள் என்னை, சபித்து, பைத்தியக்காரனைச் சுற்றிச் சிறு பிள்ளைகள் நின்றுகொண்டு கற்கள் கொண்டு அடிப்பதுபோல் அடித்து, இவ்வளவு காயங்களை உண்டாக்கினார்கள். எவ்வளவு கூட்டம் தெரியுமோ! என்ன ஆத்திரத்தோடு அடித்தார்கள் தெரியுமோ. ஆயிரக்கணக்கானவர்கள், கற்களை வாரி வாரி வீசினார்கள். "அடபாவி, பாதகா, பழிகாரா" என்று தூற்றினார்கள் என்றார் சூரியபகவான்.

ஏன்? என்றார் சடையப்பர்.

"ஏனோ! ஏன் இப்படிக் காய்ந்து தொலைக்கிறாய் என்று கேட்கிறார்கள். கோபிக்கிறார்கள். அடிக்கிறார்கள்" என்றார் சூரியர்.

"காய்வதுதானே கதிரவன் கடமை" என்றாள் காத்தாயி.

"ஆமாம்! கடமையும் அதுதான். விதியும் அதுதான்" என்றார் சூரியன்.

"மக்கள் பிறகு கோபிப்பானேன்?" என்றாள் காத்தாயி.

"மக்கள்! கேட்கிறாயே காத்தாயி. அவர்களின் கோபத்துக்குக் காரணம் வேண்டுமா! எதற்குத்தான் அவர்கள் காரணம் பார்க்கிறார்கள்" என்று சடையப்பர் வெறுப்புடன் கூறினார்.

காத்தாயியும் "ஆமாம்! அதுகளுக்கு, எதுதான் தெரிகிறது" என்று சோகத்துடன் கூறிவிட்டு, "இப்படி வெறிபிடித்தவர்கள்போல், உம்மைக் கல்லால் அடித்த பேர்வழிகள் இப்போது ஏன், ஆனந்தமாக ஆடுகிறார்கள்?" என்று கேட்க, "அதைத்தான் நான் ஆண்டவனிடம் கேட்கப்போகிறேன். இந்த அக்ரமம் உண்டா என்று கேட்கவேண்டாமா?" என்று சூரியன் கோபத்துடன் கூறிவிட்டு, "இரு! இரு! காத்தாயி, அதோ அந்த மக்கள் ஏதோ கூறுகிறார்கள் கேட்போம்" என்றார். மூவரும் உற்றுக் கேட்டனர்.

"அனாதரட்சகா! ஆபத்பாந்தவா! அடியார்களாகிய, எங்கள் குறையைத் தீர்க்க முன்வந்ததற்காகத் தங்களுக்கு ஆயிரங்கோடி வந்தனம் செலுத்துகிறோம். கதிரோன், காய்ந்து காய்ந்து, ஊரிலுள்ள நீர் நிலையங்கள் காய்ந்து போயின, பயிர் பச்சைகள் தீய்ந்துபோயின, எங்கள் வயறு எரியத் தொடங்கிற்று. சூரிய பகவானுக்கு நாங்கள் ஒரு குறையும் செய்யவில்லை. கண்ணால் காணும் போதே "பகவானே!" என்று கூறி துதிக்கிறோம். பரிசுத்தமான கங்கையில் குளித்தானதும், கைகூப்பி, "கண்கண்ட தெய்வமே" என்று பூஜிக்கிறோம். பாற்பொங்கல் படைக்கிறோம். சிரித்த முகத்துடன் கிளம்பி, எங்கள் பூஜையை ஏற்றுக் கொண்டானதும், சீற்றத்துடன் எங்களை முறைத்து முறைத்துப் பார்த்துவிட்டு, நாங்கள் படுக்கைக்குப் போகுமுன்னம், எங்களை நோக்கி கேலி செய்வதுபோல் புன்சிரிப்புடன் மறைகிறார். பிரதிதினமும் இதே கதிதான். எவ்வளவோ தீட்சணியம், உக்கிரம்! எங்கள் பூஜையைப் பெற்றுக்கொண்டு தரும் பலன் இதுதானா? இப்படிச் செய்தால் எமக்குக் கோபம் வராதா! மழை இல்லை. மக்களுக்கு உணவுக்கு வழியில்லை. மாடு கன்றுக்கு புல் இல்லை. உமது பூஜைக்கு மலர் இல்லை. மனதிலே மகிழ்ச்சியில்லை. எவ்வளவோ வேண்டினோம், துதித்தோம், சூரியனுக்கு மனம் இரங்கவில்லை. கடைசியில் பார்த்தோம். அடியாத மாடு படியாது என்பார்களல்லவா? எடுத்தோம்கற்களை. விடுத்தோம் சரமாரியாக, சக்கை போடு போட்டோம். பிறகுதானே, மழை பெய்தது. உமது கருணையே கருணை.

நாங்கள் சூரியனை இம்சித்தோம் என்று உமக்குக் கோபம் வருமோ என்று முதலில் பயந்தோம். இப்போது தெரிந்துவிட்டது. சூரியனை நாங்கள் கல்லால் அடித்ததைத் தாங்கள் தவறாகக் கொள்ளவில்லை என்று. தயாநிதே! தாங்கள் அனுப்பிய மழைக்காகத்தங்களுக்குஎங்கள் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்" என்று காசி க்ஷேத்திர வாசிகள், விஸ்வநாதர் ஆலயத்திலே வந்தனை வழிபாடு செய்துகொண்டு, ஆண்டவனைத் துதித்துக் கொண்டிருந்தனர்.

"கேட்டாயோ காத்தாயி! நான் அழுத கண்ணீர், அவர்களுக்கு மழையாயிற்று. அதற்காக ஆண்டவனுக்கு பூஜை செய்கிறார்கள். கல்லடி எனக்கு, பூஜை அவருக்கு! கஷ்டம் எனக்கு, சுகம் அவருக்கு! இதுவும் என் விதிதானோ," என்று சூரிய பகவான் சோகித்துவிட்டு, "என் விஷயம் இது. உங்களைப்போல் எனக்கும் நிம்மதியான வாழ்வு கிடைத்தால் போதும், இந்த உத்தியோகத்தை ராஜினாமாக்கூடச் செய்துவிடுவேன்" என்றார்.

அதுவரை, பொறுத்துக்கொண்டிருந்த காத்தாயியால், அதற்கு மேல் தாளமுடியவில்லை. கண்களில் நீர் கசியக் கசிய, முந்தானையால் துடைத்துக்கொண்டே, "எங்கள் கதையைக்கேட்டால்தானேதெரியும். அதைக்கூறத்தான் இங்கு வந்தோம். வந்த இடத்திலேஇந்தச்செய்திகேட்டோம்" என்று விம்மினாள்.

'உங்களுக்கு வந்தகஷ்டமென்ன?' என்று சூரியபகவான் உருக்கத்தோடு விசாரிக்க, காத்தாயி தனது கதையைக் கூறினாள்.

"நீங்கள் மறந்துவிட்டீர்களோ என்னமோ! நாங்கள் மஞ்சப்பட்டினத்தில் உத்தியோகம் ஏற்று 15 வருடமாகிறதல்லவா! நாங்களாகவா போனோம்? இல்லையே! எவ்வளவு வேண்டினார்கள், கூத்தாடினார்கள், கொண்டாடிக் கும்பிட்டார்கள். அதை நினைத்துக்கொண்டால்நெஞ்சு பகீரென்கிறது. மஞ்சப்பட்டினம், காசிபோல், பூர்வகாலப் பெருமையுள்ள ஊருமல்ல, கல்கத்தா பம்பாய்

(17-ம் பக்கம் பார்க்க)

## கதிரவன் கண்ணீர்

17-ம் பக்கத் தொடர்ச்சி

தது. மஞ்சப் பட்டினத்திலே, நாங்கள் குடி வந்ததும், இது நடக்கும் அது நடக்கும் என்று பூஜாரி புளுகினது நடக்கவில்லை. எது நடந்தாகணுமோ அது நடக்குமா, எங்களை வேண்டிக் கொண்டபடி நடக்குமா, நாங்கள் என்ன பிரம்மாவா? நினைச்சபடி நடக்காது போகவே, கொஞ்சம் வெறுப்புத் தட்டின மாதிரி ஜனங்கள் நடந்து கொண்டார்கள். அந்த வருடம் விளைச்சல் இல்லை. மழை கிடையாது. அதற்கு நாங்கள் என்ன செய்வது? நாங்கள் என்ன இந்திர பகவானா?

* * *

சோர்ந்துபோன மக்களுக்கு, பூஜாரி தந்திரம் சொல்லிக் கொடுத்தான். "காத்தாயிக்கு, ஊர்ப்பொங்கல் வைக்கணும், வைத்தால் மழை, குடங்குடமாக் கொட்டும்" என்று சொன்னான். ஊர்ப் பொங்கல் வைத்தார்கள், பூசாரியின் வீடு கொஞ்சம் பொங்கிற்று, அவன் வயிற்றிலே கள் அதைவிட அதிகமாகப் பொங்கி, வழிந்தது மறுதினம் நல்ல மழை! "பார்த்தாயா, காத்தாயியின் மகிமையை" என்று சொல்லி மக்கள் துதித்தார்கள். எங்கள் பாடு கொஞ்சம் நிம்மதியாயிற்று. ஆனால் பாழாய்ப்போன மழை விடவில்லை. அன்றெல்லாம் பெய்தது. ஆறு குளம் ரொம்பிற்று. கழனிகாடு முழுதும் வெள்ளம். மறுநாள் பெய்தது. மரங்கள் முறியும் பெருங்காற்று. வீடுவாசல் குளமாயிற்று. விடவில்லை மழை. மழை வந்ததே என்று சந்தோஷித்த மக்கள், "காய்ந்தா காயுது, பேய்ந்தா பேயுது. இது என்ன காத்தாயி அப்பா" என்று சலித்துக் கொண்டார்கள். மழையினால், ஊருக்கு நஷ்டம், எங்களுக்கும் மனக் கஷ்டந்தான்.

* * *

மறு வருடம், மழை இல்லை. மக்கள் முகத்திலே மலர்ச்சி இல்லை. எங்கள் வாழ்க்கையில் குளிர்ச்சி இல்லை. பூசாரியை, ஜனங்கள் கேட்கத் தொடங்கிவிட்டார்கள். "என்ன பூசாரி! காத்தாயிக்குக் கிடா வெட்டறதிலே குறைவில்லை. நீயும் உடுக்கை அடிக்க ஓய்றதில்லை. ஒண்ணும் காணோமே. ஊர், நாளுக்கு நாள் க்ஷீணிக்குதே. அம்மாவுக்கு மனம் இரங்கலியா?" என்றுகேட்பார்கள்.

"அண்ணே! அவசரப்படாதிங்க, இதெல்லாம் அம்மா சோதனை. அடுத்த வருஷம் பாருங்க" என்று பூசாரி சமாதானம் கூறுவான். ஆனால் யாருமில்லாத நேரத்திலே, "காத்தாயிபாடும் நம்மபாடும் திண்டாட்டந்தான்" என்று மெள்ள முணுமுணுத்துக் கொள்வான்.

அடுத்த ஆண்டிலே பூஜாரி சுபிட்சம் வரும் என்று சொன்னான். ஆனால் வந்தது அதுவல்ல. காலரா! அது ஆரம்பமானதும், கொஞ்சம் பூஜைகள் அதிகரித்தது. ஆனால், பூஜை செய்த வீட்டிலேயே பிணம் பொத்தென விழ ஆரம்பிக்கவே, பூஜை நின்றுவிட்டது. பூஜாரிக்கு சென்ற இடமெல்லாம் எதிர்ப்பு. "என்ன குறையைச் செய்தோம்! எங்கள் ஊருக்கு இந்த அவதி இதுவரையில் வந்ததே கிடையாதே" என்று கேட்கலாயினர். இளநீர் அபிஷேகம் செய்தால், அம்மையின் கோபம் தணியுமென்றான். அரைகுறை மனதுடன் செய்தார்கள். காலரா ஓயவில்லை. ஊரிலிருக்கும் வேப்ப மரங்கள், மொட்டைக் கொம்புகளாயின. பல குடும்பங்களிலே பரிதாபகரமான சாவுகள். ஒரு ஏழைக் குடும்பத்திலே, தாய், தந்தை, கணவன் மூவரும் இறந்துவிட்டனர். இளம் விதவை, அவளுக்கு ஐந்து வயதுப் பெண், அதற்கும் காலராக்கண்டுவிட்டது. அவள், கோவிலை வலம் வந்தாள். எவ்வளவோ வேண்டிக்கொண்டாள். அபிஷேக நீரைக் குழந்தைக்குக் கொடுத்தாள். அலைந்தாள், பதைபதைத்தாள், "காத்தாயி, ஆத்தே, கண்ணைத் திறந்துபாரேன்" என்று அழுதாள். அவளது குழந்தை இறந்தேவிட்டது. அவளுடைய மனம் எவ்வளவு பதறிற்றோ, "காத்தாயி கோயிலிலே இடி விழ, என்குடும்பம் போச்சேடி. உன்னை அல்லும் பகலும் துதித்தேனே! ஆருமற்ற பாவி ஆனேனே. அருமைக் குழந்தையையும் இழந்தேனே" என்று வீறிட்டு அழுதாள். 'சீச்சீ! காத்தாயியைப் பழிக்காதே" என்று அவளை மற்றவர்கள் திட்டினார்களே தவிர, மனதிலே, "ஆமாம்! பாவம்! எவ்வளவோ வேண்டிக்கொண்டாள். காத்தாயிக்கு மனம் இரங்கவில்லையே. அவ்வளவு கல்மனதா? நாம் செய்த பூஜை வீணாகத்தானே போச்சுது" என்று விசாரப்பட்டார்கள்.

இந்த விசாரம் வளரத் தொடங்கிற்று. எங்களுக்குத் திகில் பிறந்தது. பூஜைகள் குறைந்தன. கோயிலுக்கு, யாரோ சிலர், ஒப்புக்கு வந்தார்கள், போனார்கள். ஆனால், பழைய ஆசை போய்விட்டது. இவ்விதம் சில வருடமாயிற்று. நாங்கள் ஏழைக் குடித்தனம் செய்தோம். ஏதுவோ நடக்கிற அளவு நடந்தாலும் போதும் என்று மனதைத் தேற்றிக்கொண்டுதான் வந்தோம். பூஜாரியும் இளைத்துத்தான் போனான்.

* * * *

போன வருடம் எங்களைச் சனி பிடித்துக்கொண்டது. மஞ்சப் பட்டினத்து வாலிபர்கள், மாகாளி புராணம், மகேஸ்வரன் பிறப்பு முதலிய கதைகளைப் படிப்பதை மறந்துவிட்டனர். சும்மாவாவது இருந்தார்களா! அந்தப் புராணங்களைக் கேலி செய்யத் தொடங்கினார்கள். ஊரிலிருந்த பெரியவர்கள், அடக்கித்தான் பார்த்தார்கள், முடியவில்லை. காலத்தின் கோலம் என்று கூறிவிட்டனர்.

"தாத்தா! நமக்கு மட்டும் ஏன் ஆயிரக்கணக்கான சாமி, மற்ற நாடுகளிலே ஒரே சாமி இருக்கிறதே. அவர்களெல்லாம் நன்றாக வாழ்கிறார்களே, நாம் இப்படி வதைகிறோமே! காத்தாயி, மாரியாயி, மூக்காயி என்று மூலைக்கு மூலை இருக்கிறது. ஓயாமல் பூஜை செய்கிறோம். ஒரு பலனும் காணவில்லையே. கஷ்டம் குறையவில்லையே" என்று வாலிபன் ஆரம்பிப்பான்.

கிழவன், "அவனவன் தலையிலே எழுதினபடி தானேடா, நடக்கும் காத்தாயியைக் கும்பிட்டு, கால்படி அரிசிபொங்கிவிட்டா, அன்று அவன் எழுதினது அழிந்தா போகும்" என்று சாமர்த்தியமாகப் பேசுவார்.

"விதிப்படி காரியம் நடக்குமென்றால், நடுவிலே, இந்தக் காத்தாயி, கருப்பன் ஏன் தாத்தா? நடப்பது நடக்கட்டும் என்று நாம் சும்மா இருந்துவிடலாமே, இந்த வீண் செலவு ஏன்" என்று வாலிபன் கேட்பான்.

"போடா! பொல்லாத கேள்வி கேட்டுவிட்டே! நம்மைப் படைச்ச ஆண்டவனுக்கு நாம் பூஜை செய்ய

வேண்டாமா?'' என்பார் தாத்தா.

''தாராளமா தாத்தா! எரு போட்டால், விளைச்சல் காட்டணுமே. பூஜை செய்தால்பலிக்கணுமே. அறுவடை காணோமே. காத்தாயிகோயில் கட்டி 15 வருஷமாகிறதே! பஞ்சம் வருவது நின்றுவிட்டதா, காலரா போச்சா, நம்ம கஷ்டம் நீங்கிவிட்டதா'' என்று வாலிபன் கேட்பான்.

''ஒன்றுந்தான் போகவில்லை. ஓயாத தொல்லைதான்'' என்று கிழவர் ஒப்புக்கொள்வார்.

வாலிபன் தன் வாதம் கெலித்தது என்று எண்ணிக்கொண்டு போய்விடுவான். ஆனால் வேறோர் கிழவரைக் கண்டதும், அந்தக் கிழவர், நமது கஷ்டம் ஒரு பெரிதா, தலை எழுத்தின்படி தானே நடக்கும்'' என்று பழையபல்லவிதான்பாடுவார். மற்றக் கிழவர், ''இது என்னஎந்தக்காலத்திலும் நடப்பதுதானே. அப்போக் கொத்தராமபிரான்....''என்று ஆரம்பிப்பார். இருவரும்,ராமர், சீதையை விட்டுப்பிரிந்து தவித்தது, சிவன் பிச்சை எடுத்தது, பிரமனின் தலை போனது முதலியகதைகளைப் பேசிக் கொண்டே காலந்தள்ளுவர் இந்தக் கிழவர்கள். பேசும் சக்திபெற்றிருக்கும் வரையிலே நாம் காலந்தள்ளலாம் என்று ஒருவாறு தைரியப்படுத்திக்கொண்டு வாழ்ந்து வந்தோம். ஆனால் இந்த வாலிபப் பிள்ளைகள் விடவில்லை. ஓயாமல் பேசினர். சுயமரியாதைச் சங்கமாம், தமிழர் கூட்டமாம், குடிஅரசுப் பத்திரிகையாம், ஏதேதோ ஆர்ப்பாட்டம் செய்தனர். வாலிபர்களின பிரசாரம் வலுப்பெற்றது. 1940—லும், சுபிட்சம் இல்லை. 1941 பிறந்தும் பயனில்லை. வாலிபர்கள் மூட்டிவிட்ட கோபம் கிழவர்களையும் பிடித்துக்கொண்டது. என்ன சொல்வோம், எங்களைப் பூஜித்தவர்களே தூஷிக்கத்தொடங்கினர்.

''அரைக் காசுக்குப் பிரயோஜனமில்லை'' என்றார் ஒருவர்.

''சுத்த தண்டம்'' என்று ஒருபடி மேலேறினர் வேறொருவர்.

வீணான செலவு. மெனக்கேடு என்றார் இன்னொருவர்.

''காத்தாயியும் மூக்காயியும்,இதெல்லாம் அந்தப்பசங்கள் சொல்றது போலே, கட்டுக் கதையப்பாஎன்றார். நடுத்தர வயதுள்ளஆசாமியொருவர். ''அந்தக் கோயில போனால்என்ன இருந்தால் என்ன'' என்றார் வேறொருவர் வெறுப்பாக.

''மதில் சுவர் இடிந்து வருகிறதே தெரியுமா'' என்றார் இன்னுமொருவர்

''இடியட்டும். இந்தக் காத்தாயி கோயில் கட்டினது முதல் நம்ம ஊரே நாசமாகி வருகிறது'' என்றார் ஒருவர்.

''நல்ல வேளையிலே கோயில்கட்டவில்லை. அதனாலே வந்தவினைதான் இவ்வளவும்'' என்று ஒரு கிழவர், கோயிலைக் குறைகூறாது வேளையைக் குறை கூறினர்.

''தாத்தா, நேரம் சரியில்லை என்றால், இன்னும் அந்தக்கோயிலைக்கட்டி அழுவது ஏன்? இடித்துத்தள்ளுவது தானே'' என்று ஒரு வாலிபன் கேட்டான்.

''இடித்தால்தான் என்ன'' என்றார். பல குரல்கள் கிளம்பின. நான் என்ன சொல்லுவேன், மண்வெட்டியும், கடப்பாரையும் எடுத்துக் கொண்டு, கோயிலுக்கு வந்தனர். எவ்வளவு பக்தியோடு கட்டினார்களோ, அவ்வளவு ஆத்திரத்தோடு இடித்தார்கள். மதில்சரிந்தது, கோபுரம் இடிக்கப்பட்டது. பிரகாரம் பிளக்கப்பட்டது.

ஒரே கூக்குரல். இடி! பிள! அடி! என்ற சத்தம். பெண்களிலே சிலர், ''இடிக்க வேண்டியதுதான். அவள் முன்னமேயே காத்தாயி கோயிலிலே இடி விழ என்று சாபம் கொடுத்துத்தான் போனாள்; பத்தினியாச்சே அந்தப் பெண்'' என்றனர்.

சிலர் கோயிலை இடித்தால் என்ன கேடு வருமோ என்று பயந்தனர். பூஜாரி, ஊரைவிட்டே ஓடி விட்டதாகக் கேள்வி. இடிக்கும்படை, நாங்கள் தங்கியிருந்த மூலஸ்தானத்துக்கே வந்தது. ''சடையப்பரே'' என்று நான் கூறுமுன்னம், 'கிளம்பு' என்றார் அவர்; இருவரும் சிலையை விடுத்து சரேலெனக் கிளம்பி, அந்தரத்தில்: அவர்களின் கண்களுக்குத் தெரியாமல் நின்றோம்.

கண்ணைப் பாரடா காட்டுக்கோட்டான் போல! மூக்கைப் பாரடா மூணு முழ நீளம்! கையைப் பாரடா கலப்பையைப் போல! மீசையைப் பார், மீசை! இடுப்பிலே போட்டா அடி, பாதியாகப் பிளக்கும்! என்று அந்த மக்கள் எங்களைத் தூற்றிக் கொண்டே சிலைகளை உடைத்தனர். எங்களைக், கண்ணாயிரம்படைத்தவளே! கபால மூர்த்திக் குகந்தவளே! கார்வண்ணன் தங்கையே! மலர்க் கண்ணி! மாகாளி! என்று துதித்த வாய்கள், அன்று அப்படித் தூற்றின. சிலைகள் தூள் தூளாயின!

* * *

இனி இங்கிருப்பது ஆபத்து என்று எண்ணி, ''இவ்விதமாக எம்மை வரவழைத்து 15 ஆண்டு எமது பரிபாலனத்தின் கீழிருந்து, பிறகு எங்கள் கோயிலை உடைத்து, அவமானப்படுத்தி,ஊரைவிட்டு நாங்கள் ஓடும்படி செய்த மக்களுக்குத் தக்க தண்டனையைத் தர வேண்டுமென ஆண்டவனிடம் முறையிட எண்ணினோம். முதலில் உம்மிடத்திலேசொல்லலாம் என்று வந்தோம். இங்கே, உமது நிலை இப்படி இருக்கிறது'' என்று காத்தாயி தனது வரலாற்றைக் கூறிமுடிக்கச், சூரியன் ''சரி வாருங்கள் ஆண்டவனிடம் சென்று முறையிடுவோம்'' என்று கூறின வுடன், அந்தரத்தில் இருந்து ஓர் ஒலி கிளம்பிற்று!

* * *

''சூரியனே, காத்தாயி, சடையப்பா, கேளுங்கள், நீங்களும் உங்களை ஒருகாலத்தில் பூசித்து இப்போது இம்சித்த மக்களும், இந்த வரலாற்றைக் கேட்டு நீதி வழங்குவார் என்றெண்ணி நீங்கள் வந்து அடுத்துள்ள நானும், எல்லாம்,வேறு வேறு என்று எண்ணி வேதனைப் படுகிறீர்கள். வேறல்ல! எல்லாம் நானே! சோகிக்கும் சூரியனும் நானே, அவனைக் கல்லால் அடித்த காசிவாழ் பக்தர்களும் நானே, கோயில் கட்டிய மஞ்சப்பட்டின மக்களும் நானே, கோயிலை இடித்தவர்களும் நானே, காத்தாயிநானே, சடையப்பனும்நானே, உமக்கு, யாராலோ தொல்லை நேர்ந்ததாக முறையிடுகிறீர்களே பேதைகாள்! நான் வேறு நீங்கள் வேறல்ல! எல்லாம் நானே! அவனன்றி ஓரணுவும் அசையாது என்பதை மறந்தீரோ!'' என்று ஒலி கேட்டது!

* *

சூரியன் காயச்சென்றான். காத்தாயியும் சடையப்பரும், கூப்பிட்டால் போவோம் என்று உடுக்கை சத்தம் எங்கு கிளம்புகிறதென்று எதிர் பார்த்து இருந்தனர். காசி

வாசிகள், கங்கையில் மூழ்கி எழுந்து கதிரவனை வணங்கினர். ஆண்டவன் தயையால் நம்மைப் பிடித்த சனி இனித் தீர்ந்தது என்று மஞ்சப்பட்டின வாசிகள் தொழுதனர். மற்றோர் கோயில் கட்டுவிக்க என்ன தந்திரம் செய்யலாம் என்று மதவாதி யோசித்துக் கொண்டிருந்தார்.

* * *

"இது என்ன கதையப்பா! இப்படியும் ஒரு சம்பவமா? சுத்த அபத்தம்" என்று கேட்பீர்கள். "காத்தாயி சூரியனைப்பார்ப்பதாவது! கல்லடிபட்ட சூரியன் கதறுவதாவது! கோயில் இடிவதாவது! இது யாரிடம் அளக்கிறாய்" என்று கேட்பீர்கள்.

காத்தாயி பேசினதோ, சூரியன் அழுததோ கிடக்கட்டும். சூரியனைக் கல்லாலடித்து மழை பெய்ய வைத்த சூரர்கள் காசியிலே இன்றும் இருக்கிறார்கள்.

இது 'தினமணியில்' வந்தசெய்தி.

### "கதிரவனுக்குக் கல்லடி!"

### காசி வாசிகள் கை வரிசை!

காசி, ஜூன், 28

மழைபெய்யாததால், வெப்பத்தைத் தாங்கமுடியாமல் ஆயிரக் கணக்கான மக்கள் மனங் கொதிப்படைந்தார்கள். ஆதலால் சென்ற சில தினங்களாக அவர்கள் சூரியன்மீது கற்களை வீசிக்கொண்டிருந்தனர்.

இன்று அந்த மக்களின் மனம் மகிழ்ச்சி யடையும்படி நீல வானத்தில் கருமேகங்கள் சூழ்ந்தன. காலையில் அரை மணி நேரமும் மாலையில் அரை மணி நேரமும் மழை பெய்தது. அதனால் இப்பொழுது காசி நகரம் வெப்பம் தணிந்து குளிர்ச்சியாக இருக்கிறது.

* * *

காத்தாயி கோயிலை இடித்த செய்தி இதோ "சுதேச மித்திர"னில் இருக்கிறது:—

### வைகைக் கரையில் விக்கிரகங்கள்.

### மஞ்சப் பட்டினத்தில் சம்பவம்

ராமநாதபுரம், ஜூன், 18

பரமக்குடி தாலூகா மஞ்சப்பட்டினத்தில் அக்கிரமவாசிகள் சென்ற பிரமோதூத வருஷம் வைகாசி மாதம் சுமார் 2500 ரூபாய் செலவில் ஸ்ரீ சடையப்ப ஸ்வாமி ஆலயத்துக்குக் கும்பாபிஷேகம் செய்தனர். மேற்படி கிராமவாசிகள் அவ்வருட முதல் க்ஷீணமடைந்து வருவதாகக் கருதினர். எனவே ஆலயத்தின்மீது வெறுப்புற்றுச் சென்ற ஞாயிறன்று அவர்கள் அந்தக் கோயிலைப்பின்னப்படுத்தி அதிலிருந்த மூலவர் 8 அடி உயரமுள்ள ஸ்ரீ சடையப்ப ஸ்வாமியின் மூல விக்ரகம் ஒன்றையும், சுமார் 5 அடி உயரமுள்ள ஸ்ரீ காத்தாயி அம்மன் விக்கிரகம் இன்னும் பல விக்கிரகங்களையும் அப்புறப்படுத்தி வைகை நதிக் கரையோரமாக வைத்துவிட்டனர். இப்பொழுது அவ்வாலயத்தில் பூஜை கிடையாது.

இது விஷயமாக கிராமத்தில் விசாரித்தால் அவர்களனைவரும் ஏகோபித்தே இக் காரியத்தைச் செய்தனரென்று கூறப்படுகிறது.

* * *

இப்போது என்ன சொல்கிறீர்கள். இவ்வளவு பிரகஸ்பதிகள் இருக்கும் நாட்டிலே, காத்தாயி பேசுவதாகக் கூறியதுதானா அதிசயம்!

என்றையத் தினம் இந்தப் பேதைமை ஒழியும்? எப்போது இத்தகைய ஆபாசமான கருத்துகள் நமது மக்கள் மனதை விட்டு அகலும்?

மௌனந்தான் பதிலா? வேறு பதில் கூறும் தீரர்கள் இல்லையா! இந்தக் கோர நிலைமையை மாற்றி அறிவு விளங்க, ஆராய்ச்சி ஓங்க, மக்கள் பகுத்தறிவாளர்களாகச் செய்ய வீரர்கள் இல்லையா?

## நாகரிக நாட்டில்

நிறம், பிறப்பு, ஏழ்மை முதலியவற்றின் காரணமாக மனிதனை மனிதன் அடிமை கொள்வதும், அடக்கி ஆள்வதும், அடித்துத்துன்புறுத்துவதும், மனிதப்பண்பாடு மட்டரகமாக இருந்த காலத்தில் வேண்டுமானால், மன்னிக்கக்கூடிய — மறந்துவிடக்கூடிய குற்றங்களாகக்கொள்ளலாம். விண்ணில் தாவி, வெண்மதியில் வாழும் வகைதேடும் முறையில் விஞ்ஞானம் வளம் பெற்றிருக்கும் இக்காலத்திலும், மானுஷீகத்தை மதிக்க மறுத்து, கொலையினும் கொடிய செயல் பல புரிந்துவரும் மக்கள் உருவில் உலவும் விலங்கினங்கள் வாழும் காட்சியினை இன்றும் உலகில் காண்கிறோம். மதிவளங் குறைந்து, கல்வி கேள்வியின்றிப், பழைமைப்பிடியில் சிக்கி, அவதார அற்புதங்களில் அறிவைப் பறிகொடுத்து, ஆண்டவனுக்கு வரும் ஆபத்தை அகற்றி அவனைக் கரைசேர்க்கும் நிலையில் ஈடுபட்டுள்ள மக்கள், மனிதனை மதிக்காது, ரத்தவெறி கொண்டலைந்தால், அது அவர்கள்நிலைமைக் கேற்ற நடவடிக்கை என்று தீர்மானித்துக்கொள்ளலாம்— தள்ளிவிடலாம். ஆனால் நாகரிக மிக்கநாடு, பஞ்சம் பசி தெரியாதபூமி, உலகத்திற்கே உணவளிக்கும் தகுதிவாய்ந்த தரணி, தொழில் திறம் மிக்கதேசம் என்றெல்லாம் சிறப்பித்துப் பேசப்படும் அமெரிக்காவில், இன்றும் கருநிறப் படைத்த நீக்ரோக்களை, காதையறுப்பதும் கண்களைக் குடைந்தெடுப்பதும், கைகளை முறிப்பதும், கால்களைத் துண்டிப்பதும், மண்டையைப்பிளப்பதும், நாட்டுக்குச் செய்யும் நல்ல காரியங்களெனச் செய்துவரும் வெள்ளைநிறக் கொலைஞர்கள் வாழ்ந்து வருகின்றனர். ஆண்டவனிடத்து அவநம்பிக்கை கொண்டவர்களல்லர் இந்த வெள்ளைநிற வெறியர்கள். இவர்கள் கொலைச்செயல்களில் சிக்கி, அவயவங்கள் பிய்க்கப்பட்டு வாய்விட்டு நீக்ரோக்கள் போடும் கூச்சலை, இவர்கள் இருதயகீதமெனக் கொள்கின்றனர் போலும்! இவ்வாறு சிந்தப்படும் நீக்ரோக்களின் குருதி மண்ணின் நிறத்தை மாற்றுகிறதேயன்றி, இக்கொடியவர்களின் மனத்தை மாற்றும் சக்தி பெற்றிருக்கவில்லை! பூனையிடம் சிக்

(16-ம் பக்கம் பார்க்க)

# யானைமீதேறி பூனைபிடிக்கும் முறை!

## செல்லாத நோட்டு

"பழங்காலப் பெருமைகளைப்பற்றியே பேசிக் கொண்டிருப்பது, செலாவணியில்லாத ஆயிரம் ரூபாய் நோட்டுகளைக் காட்டிப் பெருமைப்படுவதை ஒக்கும். எழுத்தாளர்கள், இப்போது செலாவணியில் உள்ள நாணயங்களை உபயோகிக்க வேண்டும்."

அகில இந்திய எழுத்தாளர் மாநாடு, காசி.

**1–11–47-ல், தோழர். கே. சீனுவாசன்.**

---

### அர்த்தநாரிஸ்வரப்போக்கு

அர்த்தநாரிஸ்வர் — பாதி ஆண், பாதிப்பாகம் பெண்–இப்படி ஓர் உருவம்! கேலிக்குரியதல்ல — வணக்கத்துக்குரியது. இப்படி ஒரு கற்பனையும், அதைக்காட்ட ஓர் உருவமும், அதற்கு வணக்கமும் தேவையா, என்பது ஒருபுறமிருக்கட்டும். இப்படிக்கோயிலிலே இருப்பதற்குப்பதில், அர்த்தநாரிஸ்வர உருவிலும் தன்மையிலும், நிஜமனிதர்களே, இருந்தால், எப்படி இருக்கும்!!

நினைத்தாலே, சிரிப்பும், அடுத்த விநாடி பயமும் பிறந்து, அதற்கு அடுத்தவிநாடி, அவ்விதமாகவெல்லாம் நேரிடமுடியாது என்ற தைரியம் பிறந்து, அச்சத்தை அழித்துவிடப், பிறகு, வயிறு குலுங்கக் குலுங்கச் சிரிக்கச்சொல்லுமல்லவா!

அறிவுத்துறையிலே, அர்த்தநாரிஸ்வரர்கள் இருக்கிறார்கள்.

உடல் அமைப்பிலே, ஆணும் பெண்ணும், பாதி பாதி ஒட்டிக் கொண்டு, ஒருருவமாக இருப்பதல்ல, மனப்பான்மையிலே, பழமையும் புதுமையும், பாதி பாதியாக ஒட்டப்பட்டுள்ளவர்கள், பலர் உள்ளனர்.

அறிவுத்துறையிலே உள்ள இந்த அர்த்தநாரீஸ்வரர்களால் ஏற்படும் அவதி, சொல்லுந்தரத்ததல்ல.

சகலவகையான புதுமைச் சாதனங்களையும், வசதிகளையும், பயன்படுத்தி மகிழத்தான் செய்கிறார்கள். அதேபோது, பழமையையும் பெருமையாகப் பேசிக்கொள்ளவும், பழைய ஏற்பாடுகள், சிதைந்துபோன சித்தாந்தங்கள், தகர்ந்துபோனதத்துவங்கள், வெட்டி வேதாந்தம், இவைகளையும், விட்டுவிடாமலின்றி அவைகளைக் கட்டி அழுவதோடும் நிற்காமல்போற்றிப்புகழவும்செய்கிறார்கள்.

அடிக்கடி ரேடியோவிலே கேட்கிறோமல்லவா, திருப்பாவைக்கு அர்த்தம், திருவாசகத்துக்கு உரை, திருப்பல்லாண்டு—இவைபோல்.

பேசும் அவர்களோ, பேசச்சொல்லும் ரேடியோ நிலையத்தாரோ, கேட்கும் நாமோ, நம் யாவருக்கும் ஆட்சியாளராக உள்ளவர்களோ, ஒரு தடவையாவது சிந்திக்கிறோமா, ரேடியோ, என்னவகையானசாதனம் —எந்தக்காலத்தது — எவ்விதமான அறிவைக்கொண்டு கண்டுபிடிக்கப் பட்டது—இதனை—நாம் எந்தக்காரியத்துக்கு, எத்தகைய அறிவைப் பரப்பப்பயன்படுத்துகிறோம், என்று எண்ணிப்பார்க்கிறார்களா! கிடையாது! ஏன்? அர்த்தநாரீஸ்வரமனம்!

குதிரைமீது ஏறிக்கொண்டுகொசு வேட்டைக்குக் கிளம்புவது! யானை மீதேறிக்கொண்டு, பூனையைத் துரத்திப்பிடிக்கக் கிளம்புவது!

இந்த அர்த்தநாரீஸ்வரர்கள் சமயம் கிடைத்தால் இதையும் செய்ய முயல்வார்கள் போலல்லவா இருக்கிறது. ஆறிப்போன அப்பத்தைச் சூடான குழம்பிலே கொட்டிக் கொண்டு சாப்பிடும், 'பசித்தவன்' போலப், பயனற்றுப்போன பழைமையை, புத்தறிவு தயாரிக்கும் சாதனத்தில் சேர்த்து, அனுபவிக்கிறார்கள். அதுமட்டுமா! அந்த ஆறிப்போன அப்பத்தை, பயனற்றுப் போன பழைமையை, சாயம்போன சேலையைப், புகழவும் செய்கிறார்கள். இந்த முரண்பாடு, நாட்டு மக்களை மிக மிகக்கெடுக்கிறது.

ஆளவந்தவர்களும் அவர்களின் ஆதரவாளர்களும், இந்த முரண்பாட்டை முழுமூச்சாக வளர்க்கிறார்கள். சீர்திருத்தம் பேசுபவர்களின் கிளர்ச்சி எங்கு வலுவடைகிறதோ என்று, கவலைப்பட்டு, உலகிலே அறிஞர்கள் எங்கு கேவலமாகக் கருதிவிடுகிறார்களோ என்று பயந்து சிலபல, தீவிரமான சட்டங்களைச் செய்கிறார்கள். ஆனால் அதேபோது அவர்களே, பழைமைக்கும் வக்காலத்து வாங்கிப்பேசுகிறார்கள்.

எடுத்துக்காட்டுபவர் வேறு கட்சி என்பதைமட்டும் மறந்து, தயவு செய்து சிந்தித்துப்பார்க்கும்படிகாங்கிரஸ் இளைஞர்களைக் கேட்டுக்கொள்கிறோம். சின்னாட்களுக்கு முன்புமுதலமைச்சர், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலே ஆற்றிய உரையினைப் பார்ப்பவர்,யாரேனும், 1947ம் ஆண்டில், இவ்விதமான 'சந்ததா காலட்சேபம்' தேவை என்றோ, அதனால் தெளிவும் பயனும் ஏற்படுமென்றோ, அந்த உரைகேட்டு, உலகம் இந்நாட்டைப்பற்றி உயர்வாகக் கருதுமென்றோ, எண்ணுகிறார்களா? உண்மையிலேயே, ஒரு முதலமைச்சரிடமிருந்து, இதைத்தானா, பல்கலை பயிலும் மாணவர்கள் எதிர்பார்க்கின்றனர்?

இந்த உரையைக் கேட்கும், பழமை விரும்பி என்ன கருத முடியும்? யுகயுகமாக இருந்துவந்த,தடைகளைக் கோயிலிலே இருந்து நீக்கிச் சட்டம் செய்தவரும் இவர்; மயன் மனு, மனுநீதிகண்ட சோழன், மாந்தாதா, பதஞ்சலி எனும் பழங்காலத்தவரைப் போற்றித் திருஅகவல் பாடுபவரும் இவரே, என்பதை அறி

(13-ம் பக்கத்தில்)

# கேள்வியும் :: :: பதிலும்

* இந்தப் புதிய பகுதியைத் துவக்கும் போது, ஒரு முன்னுரை.

[கேள்விகளை, வரவேற்கிறோம்—கண்ணியத்துடன் அனுப்பப்படும் என்ற நம்பிக்கையுடன். கேள்விகள், கேட்பதும், பதில் கூறுவதும், பொதுக்கூட்டங்களிலே, அதிகமாகப் பழக்கத்துக் கொண்டுவந்தவர்கள், சுயமரியாதைக்காரர்கள் தான்.

இதனால், பயனும் ஏற்பட்டிருக்கிறது. சிலருக்கு, நம்மைப் பரிகாசம் செய்யச்சந்தர்ப்பமும் கிடைத்திருக்கிறது. சிலர், வீணான, விஷமத்தனமான கேள்விகள் கேட்டு, காலத்தையும் கருத்தையும் கெடுப்பதைக் குறித்துச் சென்ற கிழமை, பெரியார், பேசியிருக்கிறார். நண்பர்கட்கு அதனைக் கவனப்படுத்துகிறோம்.

கேள்வி கேட்பதற்கு, ஓர், மரியாதைக் கோடு அமைத்துக்கொண்டு, இந்தப் பகுதியைப் பயனும் சுவையுமுள்ளதாக்குவதற்கு நண்பர்கள் ஒத்துழைக்க வேண்டுகிறோம்.]

**1. மலேயாவில் உள்ள தமிழர்களைக்குறித்துத், தாங்கள்எழுதியதுபற்றித், திராவிடர்கழகம், ஏதாவதுநடவடிக்கை எடுத்துக் கொண்டதா? அதாவது மலேயா சர்க்காருக்கோ, 'இந்திய' சர்க்காருக்கோ கழகம், தீர்மானங்கள் அனுப்பிற்றா?**

*'திராவிடநாடு'—மலாய்நாட்டுத் தமிழர்கள் உள்ள நிலைமை பற்றித் தாய் நாட்டுத் தோழர்கள் அறியவேண்டும், என்பதையே முதல் நோக்கமாகக் கொண்டு, அது சம்பந்தமான கட்டுரைகளை வெளியிட்டது. சிலஊர்த்திராவிடர் கழகங்கள், தீர்மானங்கள் நிறைவேற்றின. அந்த அளவோடு தான் நின்றிருக்கிறது, பிரச்னை.*

**2. கிண்டிக்குதிரைப்பந்தயபிரச்னை, எந்த மட்டில் சென்றிருக்கிறது?**

*மலாய் தமிழர் பிரச்னை போலவே தான் இதுவும். ஆனால், இந்தப்பிரச்னை சம்பந்தமாகச், சிலஊர்க் காங்கிரஸ் கமிட்டிகளும், ஏதேனும் நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று தீர்மானித்துள்ளன. சட்ட சபையும், ஏதோகொஞ்சம் வழிக்கு வரும் போலத் தோன்றுகிறது.*

**3 கம்யூனிஸ்டு ஜீவா, திராவிடர்கழகத்தையும், தலைவரையும், தங்களையும், தாக்கிக்கொண்டு வருகிறார் என்பது தெரியுமா?**

*நன்றாகத் தெரியும்—ஏன் தாக்குகிறார், எதுவரை தாக்குவார், என்பதும் தெரியும். காங்கிரஸ் கட்சியிடம் 'சபாஷ்' பட்டம் வாங்கும் வரையிலே தாக்கிக்கொண்டிருப்பார். ஆனால், கதர்ச் சட்டையிலே காரல் மார்க்ஸ் புத்தகம், நெடுநாட்களுக்கு இருக்கமுடியாது. இன்றுஏற்பட்டுள்ள 'கூட்டுறவு' நீடிக்காது. பழையபடி, காங்கிரஸ் கம்யூனிஸ்டு தகராறு கிளம்பியே தீரும்.*

**4. கம்யூனிஸ்டு ஜீவாவுடன், நீங்கள் ஏன் ஒத்துழைக்கிறீர்கள்?**

*அவருடன் அல்ல—அவரும் அந்தக் கட்சியும் கூறிவரும், பொருளாதாரக் கோட்பாடுகள், திராவிடர் கழகத்துக்குஉடன்பாடு. ஆகவே, அந்தக்கோட்பாடுகளைப் பொறுத்தவரையிலே, ஆதரவு காட்டுகிறோம்.*

**5 அகில தமிழர் மாநாடு பற்றித் தங்கள் கருத்து என்ன?**

*கருத்து உண்டாகக்கூடிய அளவுக்கு, அந்த மாநாடு பற்றிய, விளக்கம், எனக்குத் தரப்படவில்லை—எனக்கு மட்டுமா, யாருக்கும் தரப்படவில்லை—ஒரு சமயம், மாநாடு கூட்ட முனைந்திருப்போருக்கே, அந்த விளக்கம் கரு அளவிலேதான் இருக்கிறதோ என்னவோ! ஆனால், தமிழர் நலன் என்றால் என்ன, அதற்கு இப்போது உள்ள கேடுகள் யாவை, களையும் வழி என்ன, என்பவைகளைப் பற்றி, வெங்கடேச ஐயங்காரும், முத்தைய முதலியாரும்—கோவை ஆலை அரசர் ரதனசபாபதி முதலியாரும்சேர்ந்து கூறுவதைக் கேட்பதென்றால், அபூர்வமான சந்தர்ப்பம் அல்லவா? பொதுவாக, இப்படித் திடீர் திடீரென்று கூட்டப்படும் மாநாடுகளின் பயன் என்ன என்பது, கூடிக் கலைந்த பிறகுதான் கணக்குப் பார்க்க முடியும். முன்கூட்டிக் கூற முடியாது. கருவிலுருவாகி வந்து வயதளவிலே வளர்ந்து, வெளிவந்தான பிறகு பார்ப்போம்.*

**6. திராவிடர் கழக ஏடுகளிலே, பலநாட்டு விஷயங்களை, வெளியிட வேண்டுவது அவசியமல்லவா?**

*ஆம்! ஆனால், அதன் அவசியத்தை அலட்சியப் படுத்தும் நண்பர்கள் ஏராளமாக இருக்கிறார்கள். கழக வெளியீடுகளிலே, உலக விவகாரம் இருந்தாலே, ஏதோ அவசியமற்ற பகுதி என்று எண்ணுபவர்களின், தொகை குறைந்து வருவது, நல்ல அறிகுறி. இந்திய துணைக்கண்டத்திலே, திராவிடநாடு இணைந்துள்ளது, இந்தியாவோ, உலகநாடுகளிலே, தொடர்பு வைத்துக்கொண்டிருக்கிறது. எனவே, அந்ததொடர்பு எப்படி இருக்கிறது, அதனால் திராவிடநாட்டுக்குஏற்படக்கூடியசாதகபாதகம் என்ன என்பதை அறிந்துகொள்ளவேண்டியது, மிக மிக அவசியம். உலகின் பலபகுதிகளிலே, அறிவுத்துறையிலும், தனி அரசு அமைக்கும் துறையிலும், பொருளாதார விஞ்ஞானத்துறைகளிலும், நடைபெறும் நடவடிக்கைகள், திராவிடர் கழகத்தாருக்கு, நிச்சயம் தெரியவேண்டும். ஆனால் அந்தப்பகுதி அலட்சியப் படுத்தப்பட்டிருப்பதால், "திராவிடநாடு" — சிறு சிறு பகுதிகளாகமட்டுமே வெளிநாட்டு விஷயங்களை வெளியிடுகிறது. நண்பர்களின் நாட்டம், அந்தப்பகுதி மீது நன்கு சென்ற பிறகு, அந்தப்பகுதி விரிவுபடுத்தப் படும்.*

**7. தமாஷாவரி, அதிகரிப்பது சரியா?**

*நிச்சயமாகத் தவறுதான். அதுபற்றித் தோழர்*

(12-ம் பக்கத்தில் பார்க்க)

திராவிட நாடு

காஞ்சி] 9—11—47 [ஞாயிறு

# அதுதான் சரி!

★

விடுதலைப்போர்—ஓர் தொடர் கதை. அதன் பலாபலன்களையோ, தன்மையையோகூட, அவ்வப்போது நேரிடும் நிகழ்ச்சிகளை மட்டுமே கண்டு, அதற்கேற்பக், கருத்து கொண்டு விடக் கூடாது. விடுதலைப் போரிலே, விதவிதமான முகாம்கள், விசித்திரமான மாறுதல்கள், எதிர் பாரா முத்தம், சாகசச் சரிவுகள், பல ஏற்படுவதுண்டு. இவை ஒவ்வொன்றின் போதும், கருத்துக் குழப்பமும், கடமையில்பற்று அறும் போக்கும் ஏற்பட்டு விடக் கூடும். இதிலிருந்தும் தப்பித்தான், விடுதலைப் போர் நடத்த முடியும்.

இந்திய துணைக்கண்டத்தின் மீது நீண்ட ஒரே தளை பூட்டப்பட்டில்லை. கழுத்தருகே ஓர்தளை, வாய்க்கு ஓர் பூட்டு, காலுக்கும்கைக்கும் தளைகள், இவைகளை எல்லாம் விட கொடிய தளை, கருத்துக்குப்பூட்டப்பட்டிருந்தது. பிரிட்டிஷாரின் 'ராஜதந்திர' நடவடிக்கையின் பலனாக, வாய்க்கும் கழுத்துக்கும் பூட்டப்பட்டிருந்த தளைகள் ஒடிக்கப் பட்டன. மற்றத் தளைகள் அறுபடப், போர்நடந்தவண்ணம் இருக்கிறது. சமஸ்தானக் கிளர்ச்சி விடுதலைப் போரின் ஓர் கட்டம்—முக்கியமான கட்டம். பெரிய சமஸ்தானங்களிலே, ஹைதராபாத் நீங்கலாக,மற்றவைகள்,ஓரளவுக்குப், பொறுப்பாட்சி வழங்கி விட்டன. நேற்று நடைபெற்ற, மைசூர் சமஸ்தானப் பொறுப்பாட்சிக் கிளர்ச்சியும்—திவானின் தீரம், மகாராஜாவின் மனோதிடம்—மக்களில் ஒரு பகுதியினரின் ராஜவிஸ்வாசம் ஆகியவை அனைத்தும் மண்குதிரைகள் ஆன கதையும், நாடுஅறியும். அந்தப் பெரிய சமஸ்தானங்களிலே, மன்னரின் ஏதேச்சாதிகார யந்திரம் கீழே வீழ்ந்து நொருங்கிய சத்தமே, போதுமானதாக இருந்திருக்கவேண்டும், புதுக்கோட்டைத் தனி அரசுக்கு, நிலைமையை விளக்க.

ஆனால்,புதுக்கோட்டை,'தர்பார்' போக்குடனேயே நடக்க வேண்டுமென்று, எக்காரணம் கொண்டோ, தீர்மானித்து, மக்களை, வம்புக்கு இழுக்கிறது. மன்னர் இளைஞர். எனவே மனவலிமை இருக்கலாம். ஆனால் இந்தக் காலம், மன்னரின் மனவலிமை, தோள் வலிமை, படை வலிமை, ஆகியவைகளை மக்களின் மனவலிமை, வீழ்த்திவிடும் சம்பவங்கள், நிரம்பியது. இதை மறந்து, பிடிவாதம் செய்வது அழகல்ல. மக்களை வம்புக்கு இழுக்காமலிருந்தால், மன்னர் ஆண்டுக்கோர்முறை 'அம்பு போடும் விழா' நடத்திக்கொண்டாவது, இருக்கலாம்.

இந்தத் திங்கள் பதினைந்தாம் நாள் வரை பார்த்திருந்து, பலன் ஏற்படவில்லை என்றால் பொறுப்பாட்சிக் கிளர்ச்சி துவக்குவது என்று, தீர்மானித்திருக்கிறார்கள். இதனை நாம்வரவேற்கிறோம்—மன்னருக்கும் ஆட்சிக்கு ஆலோசனை கூறும் வாய்ப்புப் பெற்றுள்ளவர்களுக்கும்,கூறுகிறோம்; இந்தக்கட்டம் புகுமுன், மக்களுக்குப் பொறுப்பாட்சி வழங்குவது, மதியின்பாற் பட்டதாகும் புதுக்கோட்டையின் மதிப்பை உயர்த்தும்.

பொறுப்பாட்சிக் கிளர்ச்சி என்ற உடனே, பொதுவாகவே, திராவிடர் கழகத் தோழர்களிலே பலருக்கு, அக்கரை மட்டுப்படுகிறது.

கழகம், சமஸ்தானப் பிரச்னைகளிலே நேரடியாகத் தொடர்பு கொண்டில்லை, தலையிடுவதில்லை, என்ற நிலை, ஒரு சமயம் இந்தப் போக்குக்குக்காரணமாக இருக்கும். ஆனால், பொறுப்பாட்சி தேவை என்ற பொது நீதியையும், அதை வழங்க மறுக்கும் ஆட்சிமீது அறப்போர் தொடுத்தாக வேண்டிய கடமையையும், நண்பர்கள், அலட்சியப் படுத்திவிட முடியாது—கூடாது. இம்மாதிரிச் சமயங்களிலே, ஒதுங்கி நிற்பதும், நமக்கென்ன என்றுரைப்பதும், நமது நோக்கமும் திட்டமும் வேறு என்பதும், நாம் அறிவோம், இந்தப் பொறுப்பாட்சியை நடத்துபவர்கள் யார், எதற்காக நடத்துகிறார்கள், யார் பலன் அடைவார்கள் என்பதும்தெரியும்,என்றுகூறுவதும், கழகத்தின்வளர்ச்சியையும்,குடிஅரசு கோட்பாட்டையும் கெடுக்கக்கூடியதாகும். முற்போக்குச் சக்திகள் திரண்டு கூடும்போது, ஆஷாடபூதிகள், சமய சஞ்சீவிகள், மோத விட்டு காத தூரம் ஓடுவோர், இடையே நின்று இச்சகம்பேசி இலாபம் பெறுவோர், ஆகிய பல்வேறு வகையினர், அந்தச்சூழ் நிலையைத் தமக்குப்பயன்படுத்திக் கொள்ள முனைவர். சுயநல, சுயஜாதி நோக்குடனே கூடச் சிலர் புகுந்து கொள்வர். ஆனால் இவ்வளவும் பொறுப்பாட்சி என்ற ஒரே இலட்சியத்தினால், மறைந்து போகும். அவைகளைக் காரணம் காட்டிப், பொறுப்பாட்சிக் கிளர்ச்சியிலே பங்கு கொள்ள மறுப்பது, தற்கொலைத் திட்டம்.

புதுக்கோட்டைத் தனியரசு திராவிடர் கழகம், மிக மிக நேர்மையுடனும் நெஞ்சுறுதியுடனும், இந்தச் சமயம், நடந்து கொள்ள முன்வந்தது கண்டு, நாம் மகிழ்கிறோம், பெருமை கொள்கிறோம்.

"புதுக்கோட்டை சமஸ்தானக் காங்கிரஸ் மக்களுக்குப் பொறுப்பான அரசாங்கம்நிறுவப்படவேண்டுமென்ற கோரிக்கையை முன் வைத்து 15—11—47-ல் சாத்வீகப் போராட்டம் துவக்கஇருப்பதை இக்கழகம் வரவேற்கிறது. மக்கள் ஆட்சி மலரவேண்டுமென்ற நம் கோரிக்கை இப்போராட்டத்தால் நிறைவேறுமென்று இக்கழகம்எண்ணுவதால். இயன்ற வகையில் பொறுப்பாட்சிப் போராட்டத்தில் ஒத்துழைப்பதாகக் கழகம் முடிவு செய்கிறது."

என்று, புதுக்கோட்டைத் தனி அரசுத்திராவிடர்கழகம்தீர்மானித்து அறிக்கை வெளியிடப்பட்டிருப்பது கண்டு அகமகிழ்கிறோம். சரியான முடிவு, சிலாக்யமான நோக்கம், என்பதால், மனமாரப் பாராட்டுகிறோம்.

சபலமும் மயக்கமும் வருவது இயல்பு. திராவிடத்தனி அரசு காணவேண்டும் என்றபொதுப்பெரு நோக்கம்கொண்டிருக்கும் நமக்குச், சாதாரணமாக, இத்தகு கிளர்ச்சிகள், 'சில்லறைகள்' போலத் தோன்றவும் கூடும். ஆனால் உண்மை அதுவல்ல-இவை ஒவ்வொன்றும், நமது உள்ளத்தைத் திடப்படுத்தும் வாய்ப்புகள், உலகுக்கு, நமது உண்மை நோக்கம்எதுவெனச்,சொல்லால்மட்டும் அல்ல, செயலால் காட்டும் சந்தர்ப்பங்கள். இந்தச் சந்தர்ப்பங்களை இழந்து விடுவது, வழி தவறும் செயல் என்போம்.

புதுக்கோட்டைப்பொறுப்பாட்சிக் கிளர்ச்சிப் பிரச்னை, சிலபல சபலங்களை உண்டாக்கும் என்பதை நாம், மறக்கவுமில்லை, குறைத்து

மதிப்பிடவுமில்லை.

1 தனி அரசு, தமிழ்த்தரணி. அதற்குத் தொல்லை தருவதா?

2 மன்னர், வீரத்தமிழ் மரபினர், அவருக்கு, விசாரம் வரும்படி நடந்துகொள்வதா?

3 திவான், ஜனாப் கலிபுல்லா, தமிழரின் நலனில் அக்கரை உள்ளவர், மொழிப் போரில் உதவினவர், நமக்கு உற்ற நண்பர்; அவருடைய நிர்வாகத்தை எதிர்ப்பதா?

4 பொறுப்பாட்சிக் கிளர்சியைச் சாக்காகக் கொண்டு, காங்கிரசன்றே வலுக்கும்—காங்கிரஸ், திராவிடர் கழகத்தை வேம்பாகக் கருதுகிறதே, இந்நிலையில் நாம் கிளர்ச்சிக்கு உதவுவதா?

5 பொறுப்பாட்சிக் கிளர்ச்சியில் முக்கிய புருஷராக விளங்கும் முத்துச்சாமி வல்லத்தரசு, மூலை முடுக்கெல்லாம் கூட, நமது கழகத்தைத் தூற்றுபவரல்லவா, அவருடைய நிர்வாகத்தில் நடக்கும் கிளர்ச்சியிலே, நாம்பங்குகொள்வதா?

6 பொருப்பாட்சிக் கிளர்ச்சி வெற்றி பெற்றால், பார்ப்பன ஆதிக்கம் வலுத்துவிடக் கூடுமே, அதற்கு நாம் வழி செய்து விடுவதாகாதா இந்தக் கிளர்ச்சியில் கலப்பது.

என்பனபோன்ற சபலங்கள்-மயக்கங்கள்—நிச்சயம் தோன்றும். ஆனால் இவைகளில் ஒன்றேனும், விடுதலை உணர்ச்சியைக் குலைக்கும் ஆற்றல் வாய்ந்ததல்ல.-நாம் குறிப்பிட்டபடி, இவை சபலங்களேதான்.

கிளர்ச்சியின் விளைவு, முன்னின்று நடத்துபவர்களின் போக்கு, பாதிக்கப் படக்கூடியவர்களின் பண்பு, இவைகளை எல்லாம்விட, 'ஜீவசக்தி' வாய்ந்தது, மக்களாட்சிக்காகப் போராடுகிறோம்என்ற வீரம்-விவேகம்-ஜனநாயகம்.

விளைவு வேதனை தருமேல், விடுதலைப் போரின் அடுத்த கட்டத்தைத் துவககுவோம், என்று உறுதி கொள்ளவேண்டுமே ஒழிய, விளைவு, நமக்குச் சாதகமாக இராதே, என்று விசாரப்பட்டு விடுதலைப்போரிலே கலவாமல் இருப்பது, சரியல்ல.

புதுக்கோட்டைத் தோழர்கள், சபலம், மயக்கம்,ஆகியவைகளுக்குக் கட்டுப்பட மறுத்து, நமக்கென்ன என்று அலட்சியமாகவும் இருந்துவிடாமல், ஆண்மையுடன்முன் வந்து அறப்போரில் பங்குகொள்ள முனைந்திருப்பது கண்டு, மிக மிகப் பாராட்டுகிறோம்.—

இயன்ற வகையில்!—இது அறிக்கையின் வாசகம். கூடாது! பொறுப்பாட்சிக் கிளர்ச்சி வெற்றிபெறும் வகையில், ஒத்துழைக்க வேண்டும்-முடியும்.

விடுதலைப்போரிலே,கலந்து கொள்வதாக முன்வந்து, தமது வீரப்பண்பை விளக்கியது போலவே, விழியை மூடிக்கொண்டு செல்லவில்லை, திட்டத்தோடு நடக்கிறோம் என்ற விவேகத்தை எடுத்துக் காட்டும் முறையிலே, கழகம், தனது வேலைத்திட்டம் பற்றிய அறிக்கையையும் வெளியிட்டிருக்கிறது.

A. அரசியல்.

1. புதுக்கோட்டைத் தனியரசில் மக்கள் ஆட்சி மலரச் செய்வது.

2. புதுக்கோட்டைத் தனியரசின் கொடியாக இப்போதிருக்கும் அனுமந்தக் கொடியை நீக்கிப், பழந்தமிழ் மன்னர்கள் மேற்கொண்ட வில், புலி. கயல் அமைந்த தமிழ்க் கொடியை, அவர்கள வழிவந்த தனியரசுமன்னர் ஏற்கச் செய்வது.

B. கல்வி.

1. தாய்மொழி: மக்கள் உயர்வுக்கு உதவும் வகையில் தாய்மொழிக்கு முதன்மை கொடுத்துக் கல்வித் திட்டத்தை மாற்றியமைக்கச் செய்வது. தமிழாசிரியர்கள், பிற ஆசிரியர்கள் போன்றுஉயர்நிலையடையச் செய்வது. தமிழ் மொழி வளர்ச்சிக்காகத் தனிப்பட அரசினர் கல்லூரி ஒன்று நிறுவச்செய்தல். அரசாங்கஅலுவல்கள் அனைத்தும், நீதி மன்ற நடவடிக்கைகள் உட்படத்தமிழிலேயே நடைபெறச்செய்வது. அரசாங்க அலுவலுக்கு நியமனம் செய்யப் பெறுபவர்கள் தமிழில் போதுமான தேர்ச்சியடைந்தவர்களாக இருக்கும்படி செய்வது.

2. கட்டாயக் கல்வி:

அண்மையில் அரசினர் தொடங்கியிருக்கும் கட்டாயக் கல்வித் திட்டத்தை வெற்றிபெறச் செய்வது.

3. தொழிற் கல்வி:

கல்வித் திட்டத்தில்தொழிற் கல்வி முக்கியம் பெறச் செய்வது.

4. சமூகக் கல்வி:

சமூகத்திலுள்ள மூடப் பழக்க வழக்கங்களை ஒழிக்கவும், சீர்திருத்த எண்ணத்தை வளர்க்கவும், காலமாறுதலை ஏற்கும்படியாக மக்கள் பண்படத்தக்க 'சமூகக் கல்வி' கல்வித் திட்டத்தில் இடம் பெறச் செய்வது.

5. மாணவர்களின் நியாயமான உரிமைகளைப் பாதுகாப்பது.

C. சமுதாயம்.

1. "ஒன்றே குலமும், ஒருவனே தேவனும்" என்ற பழந்தமிழ்க் கொள்கைப்படி;சாதி,மதவேற்றுமையற்ற புதிய சமுதாயத்தை அமைப்பது.

2. மக்கள் முன்னேற்றத்திற்குத் தடையாயுள்ள பழக்க வழக்கங்கள், சட்டங்கள், சாத்திரங்களை மாற்றியமைப்பது.

3. சமுக சீர்திருத்தம் என்ற முறையில் தேவதாசிமுறை ஒழிப்பு, மாதர் மறுமண உரிமை, இருதார ஒழிப்பு முதலிய திட்டங்கள், சட்டமாகப் பாடுபடுவது.

4. சமுதாய அமைப்பில் தாழ்த்தப்பட்டிருக்கும் தாழ்த்தப்பட்ட மக்களை மற்ற மக்களோடு சரிநிகர் சமானமாக வாழச்செய்வது.ஆலயப் பிரவேச உரிமை, தீண்டாமை ஒழிப்பு, தாழ்த்தப்பட்டோர் மற்ற மக்களுக்கிடையே கலந்து வசிக்கச் செய்வது.அவர்களிடையேயுள்ளமூட நம்பிக்கைகளை முறியடித்து அவர்களின் வாழ்க்கைத்தரம் உயரச் செய்தல்.

5. மதுவிலக்கு உடனடியாக நடைமுறைக்கு வரச்செய்வது.

6. சாதிமத வேறுபாடற்ற புதிய சமுதாயம் அமைக்கப்படும் வரை, உத்தியோகங்களுக்கு ஆள்சேர்ப்பதிலும், கல்லூரிக்கு மாணவர்கள்சேர்ப்பதிலும் வகுப்புவாரிப் பிரதிநிதித்வ முறையில் கவனம் செலுத்தும்படி செய்வது.

D. பொருளாதாரம்.

1. மக்களிடையேயுள்ள பொருளாதார ஏற்றத் தாழ்வுகளைச் சமன் செய்வதற்கான வழிகளில் பாடுபடுவது.

2. தொழில், விஞ்ஞான முறையைப் பின்பற்றி வளரச் செய்வது.

3. தொழிலாளர் உரிமைகளும், நலனும் பெற ஆவன செய்வது.

4. கிராமங்களும் நகரங்கள் போல் எல்லா வசதிகளும் பெறச் செய்து கிராமவாசிகளின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்திக் கிராம, நகர வேறுபாடின்றிச் செய்வது.

5. பிச்சைக்காரர்கள் என்றொரு கூட்டம் இருப்பது நாட்டிற்கு அவமானமாகையால் அவர்களை வேறு வழிக்கு மாற்றுவது.

6. மக்கள் அனைவருக்கும் போதுமான அளவு உணவு, உடை முதலிய வாழ்க்கை வசதிகள்கிடைப்பதற்குத் தடையாயுள்ள கள்ளமார்க்கெட்-கொள்ளை இலாபம்-பதுக்கல் கொள்கைகளை முறியடிக்க இரகசியப்படை ஒன்று அமைப்பது.

7. விவசாயிகள் தரம் உயர்வதற்கும் உரிமைகளை பெறுவதற்கும் ஆன வழி வகைகள் செய்வது. இனம் ஒழிப்பு, நிலவரிச் சீர்திருத்தம், குடிவார உரிமைகளை நிர்ணயிப்பது முதலிய சட்டங்களைக்கொண்டு வரச் செய்வது.

E. பொது.

தனியரசிலுள்ள மக்களின் ஒற்றுமைக்கும், மேலே கண்ட திட்டங்களை வற்புறுத்துவதற்கும்மற்றக்கட்சிகளோடு ஒரே முனையில் நின்று ஒத்துழைப்பது.

இந்தத் திட்டத்தை மக்கள் வரவேற்பர் என்பதில் ஐயமில்லை. குறிக்கோள் நியாயமானது, கொண்டுள்ள போக்கும் நேர்மையானது.

புதுக்கோட்டை மக்கள், வெற்றி பெற்று, விடுதலை பெற்றுப் பொறுப்பாட்சியை அடைந்து, புது வாழ்வு துவக்கவேண்டும் என்ற அவர்தம் கோரிக்கையை நாம் மனமார ஆதரிக்கிறோம்.

9-ம் பக்கத் தொடர்ச்சி

T. K. சண்முகம், அறிவு நிரம்பிய அறிக்கை வெளியிட்டிருக்கிறார். மக்கள், நாடக சினிமாக்களிலே, சில காலமாகத்தான், சீர்திருத்தக்கதைகளைக் காணவும், ரசிக்கவும், பயனடையவும் நிலை பிறந்திருக்கிறது. தமாஷா வரி அதிகரிப்பு, டிராமாக்களை, மிக அதிகமாகப் பாதிக்கும். பலரால் கம்பெனிகளை நடத்த முடியாமலே போய் விடும்—அது, நடிகர்களுக்கும் கம்பெனி நடத்துபவர்களுக்குமட்டும் நஷ்டமல்ல, சீர்திருத்தப் பிரசாரத்துக்கு இந்தச்சாதனங்களை உபயோகிக்கவேண்டுமென்று எண்ணும், திராவிடர் கழகத்துக்குப்பெருநஷ்டமாகும். அமைச்சர் அறியும் வண்ணம், இதனை எடுத்துரைப்பது, இந்த அநீதி நேரிடாதபடி தடுக்கவேண்டுவது, கலைவளர வேண்டும் என்ற கருத்துள்ளவர்களின் நீங்காக்கடமையாகும்.

8. அடிக்கடி சென்னையில், கண்காட்சிகள் (EXHIBITIONS) நடத்திவருகிறார்களே காங்கிரசார், ஏன், சென்னை திராவிடர் கழகத்தார், பகுத்தறிவும், விஞ்ஞான விளக்கமும் ஏற்படக்கூடிய கண்காட்சி நடத்தக்கூடாது?

நானுந்தான் கேட்கிறேன்! நடத்தத்தான்வேண்டும். ஆனால் யார் நடத்துவது? தனியாக ஒருவர் இருவரால் நடத்தக்கூடியதல்லவே. சென்னை நண்பர்கள்கூடி யோசித்தால் வழி பிறக்கக்கூடும்.

9. காமராஜர்மீது எதிர்ப்பு உண்டாக்கி வருவதாகவும், அவரை நீக்கிவிட ஏற்பாடுகள் நடைபெறுவதாகவும், வதந்தி உலவுவதுபற்றி, உங்கள் அபிப்பிராயம் என்ன?

வதந்திதான் எனக்கும் தெரியும். காமராஜர், ஆச்சாரியாரை எதிர்த்ததன் மூலம் அவருக்கு ஏற்பட்ட செல்வாக்கு, மீண்டும் அவர் ஆச்சாரியாருடன் குலவ ஆரம்பித்ததால், சிதைந்துவிட்டதாம். அவரை நீக்கிவிடும் அளவு, பலம் சேர்ந்தாகிவிட்டதாம். ஆனால், அவருக்குப் பதில், யார், தமிழ்நாடு காங்கிரஸ் தலைவராக வருவது என்பதிலே, அபிப்பிராய பேதம் பலமாக இருப்பதால், 'சட்டியை உடைக்க'வில்லை என்று, ஆச்சாரியார் உபமானத்தோடு, காங்கிரஸ் வட்டாரத்திலே பேசிக்கொள்கிறார்கள்.


## இம்மாதப் புதிய வெளியீடுகள்

1. நாஸ்திகர் யார்? ஆஸ்திகம் எது? 0 6
(கா. அப்பாத்துரை M.A.L.T;)
2. திராவிடர் நாகரிகம் 0 10
3. பெண்கள் உலகம் அன்றும்: இன்றும் 0 12
4. மனிதன் எப்படித் தோன்றினான்? 0 8
5. கவிஞர்விழா (6-ஓரங்க நாடகங்கள்) 0 6
6. தமிழ்க்கடவுளுக்கு ஆரியப்பாடலா? 0 4
7. முச்சங்கம் 0 8
8. தமிழரின் மறுமலர்ச்சி (C. N. அண்ணாதுரை M.A.) 0 8
9. எது இசை? (பாரதிதாசன்) 0 6
10 பாம்பு வணக்கம் (ஆராய்ச்சி நூல்) 0 4
11. சிந்து வெளித்தமிழர் 0 8

ஈழத்து அடிகள் B. A., அவர்களின் ஆராய்ச்சி நூல்களை எதிர்பாருங்கள்.

ரூ. 5. M. O. அனுப்புவோர்க்கு 11-புத்தகங்களையும் தபால் செலவின்றி அனுப்பப்படும்.

**முத்தமிழ் நிலையம்**
75, வரதா முத்தியப்பன் தெரு,
சென்னை.


## தோழர்களுக்கு

"திராவிட நாடு" இதழில் வெளியிடுவதற்காக இயக்கத் தோழர்களால் எழுதியனுப்பப்பட்ட கவிதைகள் ஏராளமாக உள்ளன. கையிருப்புக் கவிதைகளை வெளியிட்ட பின்னரே வேறு கவிதைகள் தேவைப்படும். ஆகையால், கவிதைகள் தேவை என்று அறிக்கை வெளியிடும்வரை, அன்பு கூர்ந்து கவிதைகள் அனுப்பவேண்டாமென்று அன்பர்களைக் கேட்டுக் கொள்ளுகிறோம்.

கட்டுரை—கவிதைப் பகுதி
ஆசிரியர்.

## பூனைபிடிக்கும் முறை

8-ம் பக்கத் தொடர்ச்சி

யும்போது எவ்வளவு குழப்பம் ஏற்படும்! எவர் நெஞ்சுக்குறு!

“ஓமாந்தூர் உத்தமர்! உன் வார்த்தையைக் கேட்டு மெச்சினேன். அறிவு உலகம், என்னை மறந்தேவிட்டது, நான், புகுத்திய முறையினாலேயே கேடுபல நேரிட்டுவிட்டன என்று கண்டிக்கின்றன. இந்தக் காலத்திலே, என்னை மறந்து, மார்க்சையும் பிறரையும் படித்துக்கொண்டுள்ள மாணவர்களிடையே சென்று, தைரியமாக என்னைப் புகழ்ந்து பேசினாய். உன்னைநான் மனமாரப் பாராட்டுகிறேன்” என்று மனுகூற, “அடியேன், ஆட்சிப் பீடத்தில் அமர்ந்தாலும், அந்தநாள் அருமை பெருமைகளை மறந்திடும் மாபாவியாவேனோ! மற்றவர் மறப்பினும், மனுவே! நான் உன்னைமறந்திடேன்” என்று முதலமைச்சர், கசிந்து கண்ணீர் மல்கிக்கூற, “பாலகா! உன்பக்திப் பிரபாவத்தைக் கண்டு புளகாங்கிதமடைகிறேன். பாவிகள் சிலர், பார் உள்ளளவும் பஞ்ச பூதம் உள்ளளவும் ஏற்றதென்று, நாம ஏற்படுத்திய ஏற்பாடுகளைக் குலைத்துச், சண்டாளர்களைக் கோயிலுக்குள்ளே நுழையச் சட்டமும் செய்தனராமே, நீ அறியாயோ! அறிந்தும், எங்ஙனம், அப்பெரும் பாபத்தினைப் புரியவரைச் சும்மாவிட்டாய். மற்றையோர் நமக்கென்ன என்று இருப்பர்-இருந்துபோகட்டும்-நீயும் அங்ஙனம் இருக்கலாமா?” என்று சற்று ஆத்திரத்துடன் மனு கேட்க ஆரம்பித்தால், முதலமைச்சர், என்ன பதில் கூறுவார்! “கோயில் நுழைவுக்குச் சட்டம் கொண்டுவந்ததும் என் ஆட்சியிலேதான்—என் சம்மதமும் அதற்கு உண்டு”-என்று அவர் சொன்னால், மனுவே மருளுவானே! மருண்டு கேட்பானே, “யாரைய்யா நீர் பித்தனோ! எம்மையும் புகழ்கிறாய்—வானளாவப் பேசுகிறாய்—எமது முறையையும் அழிக்கிறாய்—அது அவசியமென்றும் பேசுகிறாய்—ஏன் உமக்கு இப்படி இரட்டைப் போக்கு —” என்று கேட்பாரா, மாட்டாரா? மனு, கேட்கமுடியாது-மக்கள்? மறந்து போனோமே, அவர் முதலமைச்சரல்லவா? எப்படிக் கேட்க முடியும் மக்களால்.?

இரண்டும்கெட்ட நிலையிலே, இவ்வளவு பெரிய தலைவர்களே இருக்கும் போது, மக்கள் எப்படி இருக்க முடியும்! அவர்கள், கோயிலுக்கு, கொட்டு முழக்குடன், பழங்குடி மக்களை ஒருமுறை அழைத்துக்கொண்டும் போகின்றனர், சில இடங்களில், பெல்லாரியும் நடத்துகின்றனர்!

உங்களிலே பலர் பார்த்திருக்கக் கூடும், டாக்டர் ஜெக்கிலும் மிஸ்டர் ஹைட்டும் என்ற சினிமாப் படத்தை.

கருணாமூர்த்தியாகக் காட்சி அளித்து, ஏழை எளியோருக்கு இரக்கம் காட்டி, இதம் செய்து, எவராலும் போற்றப்படுபவர் டாக்டர்.

இரத்தவெறிபிடித்தலைந்து, எதிர்ப்பட்டோரைக் காரணமுமின்றித் தாக்கி, காம விகாரமும் கொண்டு அலைகிறான், ஹைட்.

ஆனால், இந்த இருவரும், ஒருவரே தான்!!

டாக்டர் ஜெயிக்கில், ஏழை பங்காளன். அவனே, ஏதோ ஒருவகை ‘மருந்து’ உட்கொண்டு விட்டால், மனமெனும் எரிமலையிலிருந்து, கெட்டகுணம், கொலையாகக், களவாகக், காமமாக, வெளிப்படுகிறது. ஒரே ஆசாமி, அவருக்குமுற்றிலும் முரணான, இருவேறு குணங்கள், அந்த மருந்தின் பயனாக.

அது போலாகி விடுகிறது, முதலமைச்சர் முதற்கொண்டு, கிராமத்திலுள்ள முத்தன் வரையிலே. ஒருசமயம் பார்த்தால், அதாவது, கோயிலுக்குள்ளே பழங்குடி மக்களை அனுமதிக்கும் போது, பார்த்தால், சமரசஞானிகளாய், மனிததர்மத்தை மதிக்கும் மதிவாணர்களாய், காட்சி அளிக்கின்றனர். ஆனால் அவர்களே, பழமைப் பானத்தைப் பருகியதும், காட்டுமிராண்டிப் போக்கும், காலத்தை அறியாத கபோதித்தனமும் கொண்டு, சகுனம், ராகுகாலத்திலிருந்து, பஞ்சகவ்யம் பருகும் வரையிலே ஒன்று விடாமல், பழைய முறையைச் செய்து கொண்டு, நம்மைத் திகைக்கவைக்கிறார்கள்.

இந்த இரட்டைப் போக்கு, நாட்டைக் கெடுப்பது போல வேறு எதுவும் இல்லை என்னலாம்.

யாரிடம், தெளிவையும், திட்டமான போக்கையும் எதிர்பார்க்க நமக்கு உரிமை இருக்கிறதோ, யார் உண்மையிலேயே, வழிகாட்டியாக அமைவார்கள் என்று நாம் எதிர்பார்ப்பது நியாயமோ, அவர்களே, குழப்பமும், குருட்டறிவும் கொண்டு, இருட்டறையில் மக்களை இழுத்துச் செல்கின்றனரென்றால், நாம், என்ன செய்யமுடியும்! சுயநலத்திற்காக இங்ஙனம் செய்பவர்களைக் கண்டால், அவர்களின் சூது மதிகண்டு,கோபம் கொதித்தெழுகிறது. ஓமாந்தூரார் போலச், சுயநலமின்றி, இந்தப் போக்குக் கொள்பவர்கள்சிலர் உள்ளனர்—அவர்களைக் காணும் போது, கோபம் வரமுடியவில்லை, கண்ணீரல்லவா வருகிறது! நாடும்கெடேறுது! அவர்கள்மனமும் கேடு சூழ்ந்ததல்ல; இந்த நிலையிலே அல்லவா, அவர்கள் கொள்ளும் போக்குஇருந்துதொலைக்கிறது.

மேனாட்டு முறைகளிலே மூழ்கினது போதும் —இனி நமது மதத் தலைவர்கள் சொல்கேட்டு நடவுங்கள்.—என்று ஓமாந்தூரார் ஓரிடத்திலே பேசுகிறாரே! டாக்டர் ஜெய்க்கில், மிஸ்டர் ஹைடாக மாறுகிறாரே என்செய்வது!

செல்வம் சேர்ப்பது, போகபோக்கியத்தில் மூழ்குவது, இச்சாபூர்த்திக்காக அலைவது, இந்திரியங்களைக் கட்டுப்படுத்தத் தவறுவது, இவைகளெல்லாம் இந்நாள் உள்ள கேடுகள். இவையாவும், மேனாட்டு நாகரீகத்தால் வந்தவை, என்று ஓமாந்தூரார் எண்ணுகிறார். இது, எவ்வளவு பெரிய ‘அறிவுப்பஞ்சம்’ என்பதை, எடுத்துக் காட்ட, அவர் இருக்கும் நிலையின் தன்மை, குறுக்கிடுகிறது. எந்த ஆதாரத்தின்மீது, மேனாட்டு முறை, வெறும் போகபோக்கியத்தில் புரள்வது, கீழ்நாட்டு முறை, இந்திரியங்களெனும் துஷ்டக் குதிரைகளுக்கு அறிவெனும் கடிவாளம் இடும் அறமுறை என்று கூறத்துணிகிறார். மேனாட்டிலே, வேதாந்திகள் சித்தாந்திகள், துறவுமுறை போதிப்பவர்கள், தோன்றவே இல்லை என்று எண்ணுகிறாரா? மேனாட்டிலே, கிரேக்கர் காலமுதற்கொண்டுஇன்று வரை, இங்குபேசப்படுவது போலவே, வேதாந்தம் பேசிக்கொண்டு ஒருசாரார் இருந்தேவருகிறார்கள். அதற்கு அங்கு ஒன்றும் பஞ்சம் ஏற்படவில்லையே! ஏன் இவர்கள், ஏதோ, இங்கு தான், அந்த ‘மகத்துவம்’ உண்டென்று எண்ணி ஏமாறுகிறார்கள்.

அங்கு வேதாந்தம் பேசிடுவோர் இருக்கலாம், ஆனால், போக போக்கியத்திலே புரள்பவராகவே மக்களில் பெரும்பகுதியினர் உள்ளனர்; எனவேதான் மேனாட்டுமுறையைக் கண்டிக்கிறோம் என்று கூறக்கூடும். அது

(அடுத்த பக்கம் பார்க்க)

# மலாய்நாட்டுக்கு மக்களை அனுப்பாதீர்கள்

[பினாங்கு தோழர் சுந்தரராஜன்]

## திராவிடநாட்டுத் தோழர்களே!

சென்ற 150 ஆண்டுகளுக்கு முன் மலாய் நாட்டைச் சீர்திருத்தம் செய்துசெப்பனிட்டபணியில் தீவிரப் பங்கு கொண்டவர்கள் திராவிட நாட்டுத் தமிழர்கள் என்பதைச்சரித்திரம்கூறுகின்றது. ஆனால், இன்றோ அவர்கள் நிலை கேட்பாரற்ற பிள்ளையாய் உதாசீனம் செய்யப்பட்டிருக்கும் இச்சந்தர்ப்பத்திலே, 28-9-47ல் வெளிவந்த "திராவிட நாடு" பத்திரிகையில் "அங்கு அவர்கள்" என்ற மகுடமிட்டுத் தலையங்கம் தீட்டிய கட்டுரைக்காக எமது வணக்கம்.

இந்தியா குடியேற்ற நாட்டு அந்தஸ்து அடைந்து விட்டதாகக் கூறும் 15-8-47க்குப்பின்னர், இந்தியர்கள், மலாய்நாட்டிற்குக் கூலிகளாய்வருவதென்றால் இம்மானக்கேடு இந்திய அரசியலையே சார்ந்ததாகும்.

இம்மானக்கேட்டிலிருந்து இந்தியர்களைக் கௌரவிக்க அன்பிருக்குமானால் இன்றே திராவிட நாடு தனி நாடாகப்பிரிக்கப்பட்டுப்பூரண சுதந்திரக் குடி அரசு ஆக்கப்பட வேண்டும். அப்படி ஆக்கப்படும் போது திராவிட நாட்டிலுள்ள ஜெமீன்தார், மிராசுதார், மான்யதார்களுடைய நிலங்களைத் திராவிடநாட்டின்பொது உடைமைஆக்கப்பட்டு, என் போன்ற பாட்டாளி விவசாயி, நடுத்தரவாதிகளுக்கு உண்ண உணவளித்து உயிர் வாழச் சட்டம் செய்தால், மீண்டும் மலாய் நாட்டுக்கு வந்து அவதியுற ஏதுவிருக்காது. இவைகளைச் செய்ய இந்திய டொமினியன் சர்க்கார் முன் வருமா?

அடுத்தபடி திராவிட நாட்டிலுள்ள தேவாலயங்களின் சொத்துக்களை மக்கள் பொதுச் சொத்தாக்கி அதைக்கொண்டு திராவிட நாட்டில் கல்வி நிலயங்களை, தொழிற் சாலைகளை, உண்டாக்கினால் கல்வியின்மையையும், வேலையில்லாத் திண்டாட்டத்தையும், பசிப்பிணிப் பஞ்சத்தையும் போக்கினால்மீண்டும் இந்தியர்கள் மலாய் நாட்டுக்கு வந்து அவதியுற ஏதுவிருக்காது. இவைகளைச் செய்ய இந்திய டொமினியன் சர்க்கார் முன் வருமா?

இன்னும் இந்திய டொமினியன் சர்க்கார், முதலாளிகளுக்கும், கள்ள மார்க்கெட்டுக்கயவர்கட்கும், லஞ்சம் வாங்கும் நவமணிகட்கும் மறைமுகமாகவோ, நேர்முகமாகவோ சலுகைகள் அளிப்பதால் சுயநலங்கொண்ட மில் முதலாளிகள் கொள்ளை லாபம் அடிக்கும் பொருட்டு, உற்பத்தி ஆகும் துணிகளைக் கள்ளத்தனமாக அயல் நாடுகளுக்கனுப்பி இந்தியாவில் துணிப்பஞ்சத்தை உண்டாக்கி விட்டதோடு, துணிகளை உற்பத்தி செய்த தொழிலாளர்கட்குப்போதிய ஊதியம் கிடைப்பதில்லை. வறுமையால் பீடிக்கப்பட்ட பாட்டாளிகள் தங்கள் வாழ்க்கைக்குரிய ஊதியம் கேட்டால் ஈவிரக்கமற்ற முதலாளிகள் மில்லைக்கதவடைப்புச் செய்து, வேலை நிறுத்தம் செய்துவிட்டார்கள் உற்பத்தி குறைந்துவிட்டது என்று பொது ஜனங்களிடமும், சர்க்காரிடமும்நீலிக்கண்ணீர் வடிக்கின்றார்கள். அவர்களுக்காதரவாக இந்திய டொமினியன் சர்க்காரும் பாட்டாளி மக்களை மலபார் போலீசைக் கொண்டு சுட்டுத் தள்ளிப்போராட்டஉரிமையைப்பறிக்கப் பார்க்கின்றது. ஆகவே பணக்கார ஆதிக்கத்தை வெட்டி வீழ்த்தி, திராவிட நாட்டிலுள்ள மூலாதார உற்பத்தி ஸ்தானங்களை அரசாங்கமே ஏற்று நடத்த முன்வருமேயானால், நபர்ஒன்றுக்கு 5கெஜம் என்ற துணிப்பஞ்சத்தைப் போக்கி மானங் காப்பதோடு மீண்டும் இந்தியர்கள் மலாய் நாட்டிற்கு வந்து பஞ்சைகளாய்த் திரிவதைப்போக்கலாம். இவைகளைச் செய்ய இந்திய டொமினியன் சர்க்கார் முன் வருமா?

ஆகவே எங்கள்மேல் அன்பிருக்குமானால் மேற்கூறிய திட்டங்களை இந்திய டொமினியன்சர்க்காரிடம் வலியுறுத்தி அமுலுக்குக் கொண்டுவர கிளர்ச்சி செய்வதோடு இந்தியர்கள் மலாயாவுக்குக் குடியேறுவதைச் சட்ட பூர்வமாகத்தடுக்கவேண்டும்.

★

13-ம் பக்கத் தொடர்ச்சி

வும் தவறாயிற்றே, இங்கே ஒன்றும் வேதாந்தம் பேசினதால், போக போக்கியத்தை யாரும் வெறுத்துவிட்டதாகக் கதையும் காணோமே! நமது மதவாதிகளைக் கேட்டு, அவர்கள் கூறுவதுபோல நடந்துகொள்ள வேண்டுமென்கிறாரே, அவர்களையே அவர் கேட்டுப் பார்க்கட்டும், நமது பண்டைய நாட்களிலே, போக போக்கியத்தை வெறுத்தா வாழ்ந்தனர் என்று. ஆண்டவனைக் கூட 'பொன்னார் மேனியனாக' கண்டனர்! மேனாட்டாரின் பேராசை செல்ல முடியாத அளவுக்கு நமது முன்னோர் சென்று, காமதேனு, கற்பக விருட்சம், ரம்பை, மேனகை, இப்படி எல்லாம் கற்பனை செய்து பார்த்து, அதிலே ஒருவகை ஆனந்தமடைந்தனரே! இவைகள், எதைக் காட்டுகின்றன? ஏன், ஓமந்தூரார் போன்ற, நல்ல உள்ளம் படைத்தவர்களாவது, இவைபற்றி, ஆர அமர யோசிக்கக்கூடாது. யோசிக்க முடிவதில்லை! பானம் பருகினதும், டாக்டர், ஹைடாகி விடுகிறாரே! ஹைடாகிவிட்ட உடனே அவருக்கு, நோக்கமே மாறிவிடுகிறதல்லவா! அதுபோலப், பழைமை, அவர்களை பிடித்தாட்டும்போது, அவர்கள், நாம் கூறுவது ஆதாரமுள்ளதுதானா, காரணம் சரியா, கருத்துச் சரியா, தெளிவுஇருக்கிறதா, பயன்உண்டா, என்ற இவை பற்றியயோசனை செய்யும் சக்தியே அற்றுப் போய்விட்ட நிலை பெறுகிறார்கள். அவர்கள் நிலையே இதுவென்றால், சாமான்யர்கள், அதிலும், நித்த நித்தம் காட்டு ராஜாவாக இருப்பதிலேயேகளிப்புக் கொள்பவர்களின் நிலை எப்படி இருக்கும். பெல்லாரி சம்பவத்துக்கு மூல காரணம், இந்தஇரட்டைப்போக்குத்தான். இந்த அர்த்தநாரீஸ்வரப் போக்கு மாற வேண்டும். பூனையைப் பிடிக்க யானைமீதேறிச் செல்லவேண்டியதில்லை! கொசுவேட்டைக்கு, குதிரைச் சவாரி தேவையில்லை. பழமையின் பெருமையை அறிந்து, அதன்படி நடப்பதே முறை என்பது, இவர்கள் எண்ணமானால், ஆலமரத்தடி போதும். ஆகாய விமானம் தேவையில்லை. ஊர்க்கோடி சாவடி போதும். உன்னதமான வேலைப்பாடமைந்த சட்ட சபைக் கட்டடங்கள் தேவை இல்லை, பஞ்சாங்கம் ஒன்றே போதும். பலவகை நூற்களும், நுணுக்கமறியும் கமிட்டிகளும்வேண்டாம்.

# தீக்கண்ணன்! திவ்யரூபன்!

## பொய்யுரையில் பொன்னுரை

### காண்போர்க்கு

### மாஜிகளின் மகாத்மியம்.

—❀—

"**மன்மதன்!** எவ்வளவு அபூர்வமான கற்பனை! அழகுக்கு, ஒரு தெய்வம். நமது முன்னோர்கள் தான் எவ்வளவு கற்பனா சக்தியுள்ளவர்கள்-மக்களைவிடத் தேவர்கள், தேஜஸ் உள்ளவர்கள், என்று கூறியதோடு இல்லை, தேவர்களிலேயும், ஒரு பேரழகனைச் சிருஷ்டித்தனர். அவன் அழகுத் தெய்வம்-காதல் தெய்வம்-இன்பத்தின் தூதுவன், எழிலுக்கு எடுத்துக்காட்டு. எவ்வளவு, வளமான மனம் இருந்தால், மன்மதன்போன்றதோர் கற்பனையைச் செய்திருக்க முடியும் நமது ஆன்றோர்."

*பழமைக்குப் புது மெருகிடும்பணியினைத் தமதாக்கிக்கொண்ட போக்கினர், இதுபோல் கூறுவர். குளத்தங்கரைக் குப்பன், மன்மதன், யமன், வாயு, வருணன், அக்னி, என்பன போன்ற தெய்வங்கள், நிஜரூபத்தில் உள்ளனர், என்று கூறுவான். அத்தகையோர் அப்பாவிகள்! ஆனால் இந்த 'மேதைகள்', அப்பாவியுமாகாமல், அறிஞருமாகாமல், அந்தரத்திலே தொங்குபவர்கள்!!*

*மன்மதன், என்று, நிஜரூபத்திலே ஒரு தெய்வம், உண்டு; அவன், தேவலோகத்தில்இருந்துகொண்டு, தேவர் மூவர்யாவராயினும் சரி, மலர்க்கணையைக்கரும்புவில்லிலே பூட்டித்தொடுத்துக்,காதலைக்கிளறிவிடுமவேலையைக் களிப்புடன் செய்து கொண்டிருக்கிறான், என்று கூறுவது தவறு.— என்று தெரிவிப்பார்.*

*ஆனால், அவ்வளவோடு நிற்பரோ! இல்லை! உடனே, ஒரு மூலைபாய்வர். மன்மதன், என்பது, நமது முன்னோர்களின் வளமான மனதுக்கும், கற்பனா சக்திக்கும் ஓர் சான்று. மன்மதன் என்றோர் தேவன் இல்லை என்று கூறிவிடலாம்—ஆனால் அந்த அபூர்வமான கற்பனா சக்தியை நாம் அலட்சியப்படுத்திவிட முடியாது-கூடாது — அங்ஙனம் செய்தல் அடாது — என்று சிலபல'து' போட்டு, முடிப்பர்! ஏன்? அவர்களிலே பலருக்கு, இவ்விதமான கற்பனா சக்தி, உலகிலேயே, வேறு யாருக்கும் ஏற்பட்டதில்லை, இங்கு மட்டுமேதான் உண்டான தனிப்பண்பு அது, என்பது எண்ணம். மன்மதனைப்பற்றி மட்டுமல்ல, மற்றத் தேவர்கள், அவர்களைப்பற்றித் தொடுக்கப்பட்டுள்ள கதைகள், அவர்கள் உலவுவதாகக் கூறப்படும் "லோகங்கள்", இவை போன்றவைகளை, இங்கு மட்டுமே, ஆன்றோர், சித்தரித்தனர், வெளி உலகிலே, யாருக்கும் இதுபோல எண்ணம் உண்டானதே இல்லை, என்று கூறுகின்றனர்.*

*இயற்கையின் சக்தியிலே, அழிவுச் சக்திகளை, கோரரூபம்கொண்ட தேவர்களாகவும், அழகு சக்தியை, வசீகரரூபம் கொண்ட தேவர்களாகவும், சிருஷ்டிக்கும், போக்கு, எல்லா நாட்டிலும் இருந்தது முன்னோர்களுக்கு.*

*எந்த நாட்டிலும் சரி, பலலோகங்கள், பலதேவதைகள், அவர்களைப் பற்றிப் பலப்பல கதைகள், கட்டுவதிலேதான், கற்பனைத்திறமை பாய்ந்தது. அது, ஏதோ, பிரமாதமான திறமை என்றும், அந்தத் திறமையும், இங்கே மட்டுமே இருந்ததென்றும், கூறிப் பூரிப்பர். வெளிநாடுகளிலே, ஆன்றோர் கட்டிவிட்ட கற்பனைத் தேவர்களைப்பற்றி அறிந்தால், இந்தப் போக்கு எவ்வளவு தவறு என்பது விளங்கிவிடும்.*

*மன்மதனின் அழகுபற்றி, நாம் எவ்வளவு பூரிக்கின்றோமோ, கவிஞர்கள் எவ்வளவு வர்ணிக்கிறார்களோ, காதற்கதை தீட்டுவோர் எப்படி எப்படி எல்லாம் தீட்டிக் காட்டுகிறார்களோ, அதிலே, ஒரு இம்மியும் குறையாத அளவுக்கு, அயர்லாந்திலே ஈலாதன், அந்த நாட்டு ஆன்றோர், கற்பனையால் சிருஷ்டித்த அழகுத்தேவன்-ஆஜானபாகு - அவனுடைய தங்கநிறக்கேசம் தோளில் புரண்டு கொண்டிருந்தது, தங்கக் கவசம் அணிந்துகொண்டு, மின்னும் பொன்னாலான ஐர்துவடம் கொண்ட சங்கிலியைக் கழுத்தில் அணிந்துகொண்டு, வெள்ளியால் செய்யப்பட்ட இரண்டு ஈட்டிகளும், தங்கப் பிடிபோட்ட கட்கமும் எடுத்துக்கொண்டு உலவும் திவ்ய புருஷன்— என்று அயர்லாந்து நாட்டுப்புராணிகன், அந்தநாளிலே புனைந்திருக்கிறான். இங்காவது, மன்மதனோடு விட்டுவைத்தார்கள்—அங்கு, ஈலாதான் எனும் அயர்லாந்து மன்மதனுக்கு, பிரஸ் என்றோர் மகனையும் சிருஷ்டித்து, அவனுமோர் ஆணழகன் என்று வர்ணித்துள்ளனர். கற்பனைத் திறமையிலோ, காவியரசனையிலோ, வசீகரத்தைப் பற்றிய வர்ணனையிலோ, அந்த நாட்டுப் புராணிகர்கள், ஈலாதான், பிரஸ், தேவர்களைப் பற்றிக் கூறியிருப்பதைப் பார்க்கும்போது, எந்த வகையிலும், இங்கே, ஆன்றோர் வர்ணித்ததைவிட 'மட்டம்' என்று தள்ளிவிட முடியாது. அவர்களும், அற்புதமாகத்தான், புளுகி வைத்திருக்கிறார்கள்! பொய்யுரையாக இருப்பினும், எமது முன்னோர், அதைப் பொன்னுரையாக்கியது போல, வேறுஎங்குண்டு? என்று இறும்பூதெய்தியவரென நின்று கேட்கும், இலக்கிய உருவில் புராணப் பிரசாரம் புரியும் நண்பர்கள், பொய்யுரையை மெய்யுரை என்று நம்பும் ஏமாளிகளைவிட, ஆபத்தானவர்கள்!!*

*நம்மவர்கள், முக்கண்ணனைச் சிருஷ்டித்தனர் — கற்பனையில். இதிலே, புதைந்துள்ள கருத்து, தெரியுமோ, என்று கேட்கின்றனர், பொய்யுரைக்குள் பொன்னுரை காண்போர்—என்ன ஐயனே! என்று கேட்டிடின், கூறுகின்றனர், "கேளுமய்யா பகுத்தறிவு வாதியே! முக்கண்ணன், என்று கூறியது கற்பனைதான். ஆனால் கருத்து இருக்கிறது, அதிலே. இரு கண், எவருக்கும் உள்ளதுபோல. ஆனால் இறைவனுக்கு, மூன்று கண்ணும் உண்டு. அந்தக் கண்ணுக்கு, அழிக்கும் சக்தி உண்டு! அதைத் திறந்தால், தீ! தீயனயாவையும் தீய்ந்து போகச் செய்யும் தீயைக் கக்கும் கண், அந்த மூன்றும் கண்! அது மூடியே இருக்கும். எப்போது, அக்ரமம், அநீதி, கொடுமை, தோன்றுகிறதோ, அப்போது, மூன்றாவது கண்ணைத் திறப்பார்—திறந்தால்—புராணிகர் கூறுவது கேட்டிருப்பாய்—திரிபுரம் தகனமாகும்! இது*

போலத், தீபனவற்றைத் தீய்க்கும் திருவிழியும் உண்டு, அது சதா திறந்திராது, திறந்தால் தீயன தீய்ந்தே போகும், என்ற உண்மையைக் காட்டவே இந்தக் கற்பனை. இது கருத்து நிரம்பியதன்றோ! வேறு எங்கேனும், எவரேனும், இது போன்ற ஆழ்ந்த கருத்தைக் கூறிடும் கற்பனையைக் கூறிடக் கேட்டதுண்டோ?" என்று கடுங்கோபத்துடன், பேசுவர். அவர்கள் அறிவரோ இல்லையோ,' மக்கள் நிச்சயமாக அறியமாட்டார்கள், இந்த அபூர்வமான அழிவுக்கண் கொண்ட தேவன், இங்கு மட்டுந்தான், இருப்பதாகப் புராணம் இருக்கிறது, என்று எண்ணிக் கொண்டிருப்பர். 'மேதை' எழுத்தாளர்களும், மேதினியில் இது போலக் கற்பனை உரைத்தவர் வேறு பலரும் உண்டு என்பதைக் கூறுவதில்லை. திரிபுர மெரித்திடும் திருக்கண் கொண்டதேவன், வேறு இடத்துப் புராணத்திலும் உண்டு. இங்கு மட்டுமே உள்ள அபூர்வமான, விலை மதிக்கொணாத கற்பனையல்ல அது.

பேலர் என்றோர் தேவன்! அயர்லாந்து நாட்டுக் கற்பனை. இந்தத் தேவனுக்குக் கண்கள் இரண்டுண்டு, அதிலே ஒன்று மூடியே கிடக்கும் — திறந்தால் தீர்ந்தது, எதிர்ப்பட்டதெல்லாம் தீய்ந்துபோகும். அந்தக் கண்ணுக்கு, அழிக்கும் சக்தி உண்டு. தேவர்களுக்கு எப்போதேனும் ஆபத்து நேரிட்டால், 'அசுர'க் கூட்டம் எதிர்த்தால், அப்போது இந்தப்பேலர்என்ற தேவனை, அழைத்துச் சென்று, எதிரிகளின் முன்நிறுத்தி, மூடி இருக்கும் கண்ணின் 'இமையை'த் தூக்கிவிடுவார்கள்,—அவ்வளவுதான்—அந்தப் பார்வை பட்டமாத்திரத்தில், எதிரிக் குப்பல், பஸ்மீகரமாகும்!! இப்படி ஒரு கற்பனை, அங்கு! அதுவும் அங்கு கடவுள்! இது, முக்கண்ணன், திரிபுரதகனம் போன்ற கதைகளைவிட மட்டமா! அல்லது, இதனை உண்மை என்று நம்பிக்கொண்டிருந்த காலம் வரையிலே, தீக்கண்ணனுக்கு, அயர்லாந்து மக்கள், திருவிழா நடத்தாமலோ, திருப்பல்லாண்டு பாடாமலோ இருந்தனரோ!

முக்கண்ணில் ஒன்றுக்கு மட்டும், தீயை உமிழும் சக்தி வரக் காரணம் என்ன, என்று இங்கு கூறுவதில்லை. தீக்கண் தேவனுக்கு, இருவிழியில் ஒரு விழி, ஏன், அனல் கக்கும் ஆற்றல் பெற்றது, என்பதற்குக்கூட, அயர்லாந்து மக்கள், கதை கூறியிருக்கிறார்கள்.

பேலர், என்ற தேவன், அவனுடைய தகப்பனாரின் வீட்டிலே, சில மந்திரவாதிகள், மாந்தரிக விஷம் தயாரித்துக் கொண்டிருக்கும்போது அவர்கள் அறியாவண்ணம், பலகணி வழியாக அதனைப் பார்த்தானாம். கொப்பரையிலே கொதித்துக் கொண்டிருந்த கொடிய விஷம், புகையைக் கிளப்பிற்று — அந்தப் புகை, இவனுடைய கண்களிலே ஒரு கண்ணுக்குள்ளே, நுழைந்துவிட்டது. உடனே, அந்தக் கண், தீக்கண்ணாகிவிட்டது. இது தெரிந்த தேவர்கள், கேட்டுக்கொண்டதற்கிணங்கித் தீக்கண்ணைத் திறவாமல், பேலர், வாழலானான்—என்று கதை இருக்கிறது.

எனவே, பொய்யுரைக்குள் பொன்னுரை தேடிக் காணும் நண்பர்கள், கருதுவது போலவும், கூறுவது போலவும் இங்கு மட்டுமே உண்டு இத்தகு பொய்யுரைகள், என்று எண்ணிவிட வேண்டாம். கற்பனைகள், எங்கும் உலவின! திருமூர்த்தி, திரிசூலி, தீக்கண்ணன், திவ்யரூபன்,—எங்கும் கிளம்பினர்! எங்கும் கோயில்கள் கட்டினர்-கொட்டு முழக்குடன் திருவிழா நடத்தினர்— அவை, பொய்யுரைகள் என்று தெளிவு பிறக்கும் வரை, பூஜைகள் நடத்திக்கொண்டுதான் வந்தனர். அதன் பலனாக, பூஜாரிக் கூட்டம் கிளம்பிப், பாமரரை ஆட்டிப் படைத்துக்கொண்டுதான் இருந்தது. அந்தத் தேவர்களைப் பற்றி, குறை கூறுவோர், தண்டிக்கப்பட்டனர். சந்தேகித்தோர், நிந்திக்கப்பட்டனர். இப்படி எல்லாம் இருக்க முடியுமா, தீக்கண்ணாவது தேவனுக்காவது, என்று கேள்வி கேட்டவர்கள், நாத்திகர் என்று தூற்றப்பட்டனர். நாடாள்வோரும் ஏடு தூக்கிகளும், பூஜாரிகளையே ஆதரித்தனர்—புத்தறிவைத் தடுத்தனர். ஆனால், புத்தறிவினர், 'கொடுமைகளைச் சகித்துக் கொண்டதால், தமது கொள்கைகளைப் பரப்பி, மடமையில் ஆழ்ந்திருந்த மக்களுக்கும் மதி பிறக்கும்படி அறிவைப்பரப்பியதால், இன்று, அங்கெல்லாம், தீக்கண்ணன், திவ்ய ரூபன், என்பன போன்ற தேவர்களும் கிடையாது, அவர்களைக் குறித்துத் தீட்டப்பட்ட பொய்யுரைகளுக்கு மதிப்பளிப்பாரும் கிடையாது.

7-ம் பக்கத் தொடர்ச்சி

இப சுண்டெலிபோல் அங்கு நீக்ரோக்கள், நிறத்திமிர்கொண்ட தடியர்களால் இம்சிக்கப்படுகிறார்கள்.

இதை அறவே அடக்கப்பட வேண்டுமெனவும், இதற்கான நல்லதோர் சட்டத்தை உடனடியாகச் செய்யவேண்டுமெனவும், அங்குள்ள சிவில் ரைட்ஸ் சங்கத்தினர் குடியரசுத்தலைவர் ட்ரூமனை வேண்டிக் கொண்டுள்ளனர். மிசிசிப்பி வட்டாரத்தில் ஜான்லாயிட் எனும் ஒரு நீக்ரோவை, இருபது வெள்ளையர்கள் சூழ்ந்து கொண்டு சித்திரவதை செய்தனர். அவன் எவ்வாறோ உயிர்தப்பினான். இதன் விளைவாகத்தான், இதனைத்தடுக்கும் சட்டமியற்றப்பட வேண்டுமென, ட்ரூமன் வேண்டிக் கொள்ளப்பட்டுள்ளார்.

கடந்த இருபது ஆண்டுகளாக இக்கொடுஞ் செயல் குறைந்து வந்திருக்கிறது. 1921-ல் 69 பேர் இவ்வாறு கொடுமைக்குள்ளாகி உயிரிழந்தனர். இத்தொகை 1939-மூன்றாகக் குறைந்தது. ஆனால் 1940-ல் இத்தொகை ஆறாக வளர்ந்தது. ஜப்பான் வெற்றிக்கும் பிறகு, இந்த அக்கிரமத்திற்கு ஆளாகி 23 பேர் உயிர் துறந்ததாகவும், நூற்றுக்கணக்கானவர்கள் கொடுமைக்குள்ளாகி உயிர் தப்பினதாகவும் பிரபல அமெரிக்கப் பத்திரிகைகள் வெளியிட்டுள்ளன. இவை அதிகாரிகள் கணக்கில் அகப்பட்டவை. 1946-ல் மட்டும் இவ்வாறு உயிரிழந்தவர்கள் 120 பேர் என நம்பப்படுகிறது. 1921-லிருந்து 434 நீக்ரோக்களின் உயிர் போக்கடிக்கப்பட்டுள்ளதாம்.

கொலைகாரர்கள் தண்டிக்கப்படாமலே விட்டுவிடப் பட்டார்கள். சில மாதங்களுக்கு முன்பு கரோலினா பிரதேசத்தில் இத்தகைய மிருகச் செயல் ஒன்று நடந்தது. நீக்ரோவை இம்சித்த வெள்ளையன் மீது குற்றம் மெய்ப்பிக்கப்பட்ட பின்பும், நீதிபதி அவனை தண்டிக்காது விட்டுவிட்டார். நீதியின்பால் நல்லெண்ணம் உடைய சிலர், கொலைஞனை தண்டிக்காது விட்ட நீதிபதியை வன்மையாகக் கண்டித்தனர். இவ் வேதனை மிகும் செயலைத் தடுக்கவே சட்டம் வேண்டுகின்றனர். நாகரிக நாட்டில் இனியும் இவ்வாறு நடக்க அனுமதிப்பது அழகல்ல.

## கதிரவன் கண்ணீர்

4-ம் பக்கத் தொடர்ச்சி

போல் நவீன நாகரிகப் பட்டினமும் அல்ல. ராமநாதபுரம் ஜில்லாவிலே பரமக்குடி தாலுக்காவிலே, அதுஒர் பட்டிக்காடு. அங்கு போய் வாசம் செய்ய எங்களுக்கு இஷ்டம் இல்லை. துளிக்கூடக்கிடையாது. கிராம வாழ்க்கையின் சிறப்புபற்றி, பட்டினத்துப்பிரசங்கிகள்பன்னிப்பன்னிப் பேசியும் எமக்கு மஞ்சப்பட்டினம் போக மனம் வரவில்லை. ஆனால் மஞ்சப்பட்டினத்து மக்கள் எங்களுக்கு அனுப்பிய மனு அவ்வளவு உருக்கமாக இருந்தது.

எங்களை வரவழைக்க வேண்டுமென்ற எண்ணம், மஞ்சப்பட்டின மக்களுக்கு ஏன் வந்ததோ தெரியவில்லை. நாங்கள் இல்லாமல் என்ன குறைவு இருந்தது அந்த ஊரிலே? மக்கள், உழைத்து வந்தார்கள். குடும்பக்காலட்சேபத்தை நடத்திக்கொண்டுதான் வந்தார்கள். எங்கள்மீது ஏன் அவர்களுக்கு ஆசை பிறந்ததோ தெரியவில்லை. சடையப்பர் சொன்னார் யாரோ ஒருபாரதப் பிரசங்கியாம், அவன் தனதுபிழைப்புக்காக பாரதப்பிரசங்கம் செய்து முடித்துவிட்டு, கதை கேட்டு காசு கொடுத்தவர்களுக்கு உபதேசம்செய்தானாம், காத்தாயி கோயில் கட்டினால், கலியுகத்திலே கைமேற்பலன் கிடைக்குமென்று. அவன் பேச்சை நம்பின மக்கள், கோயில் கட்டி, அங்கு என்னையும் சடையப்பரையும் குடிபுக வைத்தால் ஏதேதோ கிடைக்கும், வரண்ட நிலத்திலே திரண்ட கதிர் உள்ள பயிர் வரும், ஆற்றில் கரைபுரள ஓடும், தோட்டத்தில்காய்கறி குவியும், குடும்பத்தில் பிள்ளை குட்டிகளும் தோன்றும், சுபீட்சமாக இருக்கும் என்று ஆசைப்பட்டிருப்பார்கள். அவர்கள் நாக்கில் ஜலம் சொட்டச்சொட்ட அந்தப் புராணிகன்சொல்லியிருப்பான். அவனுக்கென்ன, புளுகத் தெரியாதா? அவன் படித்த புராணங்களிலே அந்தச் சரக்குதான் அமோகமாச்சே! அவன் தம்பிக்கு பூஜாரி வேலைவரும் வருடந்தோறும் கோயிலிலேபாரதப் பிரசங்கம் நடத்தலாம் என்பது அவன் எண்ணம். அவன் பேச்சை "ஆமா அண்ணே" என்று ஏற்றுக்கொண்டவனுக்கு, கோயில் கட்டி குளம் வெட்டி, தேர் திருவிழா நடத்தினால்; அதற்காக வசூல் செய்யும் தர்மப்பணத்திலே தனக்குக் கொஞ்சம் கிடைக்கும் என்ற ஆசை. தேனை வழிக்க யாருக்குத்தான் இஷ்டமிராது. "ஊரிலே ஏழை எளியவர்கள், செய்யவேண்டியதுதான்!" என்று ஒப்புக்கொண்டார்கள். இல்லையானால் காத்தாயி கண்ணைப்பிடுங்கிக் கொள்வாள் என்று புராணிகன் புளுகி மிரட்டிவிட்டான். மேலும் காத்தாயி செலவுக்கு கால்ரூபாய் கொடுத்தால், காலாகாலத்துக்கும் நல்லது என்று நம்பினார்கள், அவர்கள் எதைத்தான் நம்பவில்லை. ஊரிலே இருந்த பணக்காரர்கள், இந்தப் பயல்கள் இப்படிக்கோயில் கட்டிக் கொண்டிருந்தால், நல்லது தான் என்று எண்ணினார்கள். ஏனெனில், கோயில் வேலையைக்கவனிக்க ஆரம்பித்தால், தமது நிலையைப் பற்றிக்கவனிக்க ஏழைகளுக்கு நேரமிராது. ஆகவே பணக்காரருக்குத் தொல்லை இராது. கோயில் கட்ட கொஞ்சம் பணம் கொடுத்துவிட்டால், "தருமப் பிரபு, கர்ண மகாராசா" என்று பெயர் வரும், மற்றவகைகளிலே பணம் சம்பாதிக்க மார்க்கம் இருக்கும். ஆகவே அவர்களும் ஒப்புக்கொண்டார்கள். ஒன்றுமில்லை என்றாலும், கோயில் கட்டினால், வேலையாவது கிடைக்காதா என்று எண்ணி, வெகுபேர், கட்டத்தான் வேண்டும் என்றார்கள். கட்டியும் விட்டார்கள்!

* * *

கட்டிய கோவிலுக்கு, நாங்கள் வந்துசேர எவ்வளவு காரியம் நடந்தது தெரியுமோ. ஊரெங்கும் உற்சாகம், வீடெல்லாம் விளக்கு. வீதிக்கு வீதி தோரணம், மூலைக்கு மூலை பூப்பந்தல், முச்சந்திகளில் கொட்டு முழக்கு கொண்டையிலே பூ அணிந்த கன்னியர்கள், இடையிலே புது வேட்டியுடன் ஆடவர்கள், உடுக்கை சத்தமும் "ஓங்காளி" கோஷமும், ஊர்முழுதும் கேட்டது. அபிஷேகம், மந்திர உச்சாடனம் செய்ய, தேர்ந்த பூஜாரிகள், அவர்களுக்குத் துணைசெய்ய வேறுபலர், விதவிதமான வாத்தியங்கள், விண் அதிரவெடி வேட்டு! அன்று மஞ்சப்பட்டினம், தேவேந்திரப்பட்டினந்தான்.

எவ்வளவு வைபவத்தோடு நாங்கள் வரவேற்கப்பட்டோம் என்பதை வர்ணிக்க முடியாது. கோயில் அழகும், கோபுரத்தின் அழகும் சொல்ல முடியாது. நான் தங்கியிருந்து தரிசனம் தர நல்ல சிலை. அதிலே சிற்பி தன் சமர்த்தைக் காட்டியிருந்தநேர்த்தியை என்னென்பேன். சடையப்பரின் இருப்பிடமாக இருக்க அமைக்கப்பட்டிருந்த சிலை எட்டடி உயரம்! பட்டாடையும் பவள மாலையும் எனக்கு! சடையப்பருக்கும் விசேஷ அலங்காரம். அதாவது, நாங்கள், மக்களின் பூஜையைக் கண்டு மனம் இளகி, சென்று தங்கியிருந்த அந்தச் சிலைக்கு, மக்கள் அவ்வளவு அலங்காரங்கள் செய்து, விளக்கேற்றி, விழுந்து கும்பிட்டு, விதவிதமான பண்டங்களைப் படைத்து பால்காவடி மீன்காவடி புஷ்பக்காவடி எடுத்து, பூஜைகள் புரிந்தனர். சுற்றுப்பக்கத்து கிராமமக்கள் வந்து சேவித்தனர். இது 1926-ம் வருடத்திலே.

* * *

1927-ல் எங்கள் மீது மஞ்சப்பட்டின மக்களுக்கு பழைய பக்தி இருந்தது. பூஜைகள் வழக்கப்படி நடந்து வந்தன. எங்களை வேண்டிக்கொள்ளத் தவறியதில்லை. எங்களின் வீரப்பிரதாபங்கள் பற்றி, பூஜாரி, வாய் நோகப் பாடிக்கொண்டிருந்தான். பூஜாரி கூறிவந்த புளுகுகள் எங்கள் காதுக்கு சலிப்பாகத்தான் இருந்தது. "ராத்திரி காத்தாயி, நடுநிசியிலே கனவிலேதோன்றி, கருப்பு ஆடு மூன்று காவு கொடுத்து, கருப்புச் சீலை வைத்து கும்பிட்டால் நம்ம ஊர் கரும்புப்பயிர்செழிக்கும் என்று கூறினாள்" என்று ஒரே போடு போடுவான். அந்த மக்கள், "அதுக்கென்ன பூஜாரி, அம்மாளுக்கு இல்லாமே வேறு யாருக்குச் செய்யப் போகிறோம். எல்லாம் அவ இட்ட பிச்சை. அவ வாக்கற கஞ்சி, அவ கொடுக்கிற சோத்து" என்று கூறுவார்கள். ஆட்டுக்கறியும் சோறும், பூஜாரி குடும்பத்துக்குக் கிடைக்கும். அலுமேலுவுக்கு கருப்புப் புடவையும், பூசாரிக்கு அபினி கஞ்சா கள்ளும் கிடைக்கும். இதற்கு நாங்கள் என்ன செய்வது?

* * *

இரண்டாண்டு, மூன்றாண்டு வரையிலும், இப்படி, சுகமாகவே இருந்தோம். 1930 ஆரம்பத்திலே, கொஞ்சம், கெட்ட காலம் ஆரம்பித்

(5-ம் பக்கம் பார்க்க)

சேன்றவார தொடர்ச்சி

# அன்பா அறிவா?

(நக்கீரன்)

**ஆனால்,** குந்தவும் குடிசையற்ற ஒருவன், மழைக்கோ வெயிலுக்கோ கோயிலுக்குள் ஒதுங்கினாலும், அவன் நுழைந்ததால் கோயில் தீட்டுப்பட்டு விட்டதென்று கருதி அவனைத் துரத்தியடிக்கும் கொடுமையைப் பார்ப்பதற்குத் தனக்கிருக்கும் இருகண்கள் போதாதென்று மூன்று கண்களையும், நான்கு கரங்களையும்-அவற்றில் சூலத்தையும், வேலையும், வில்லையும், சக்கரத்தையும், மழுவையும் தாங்கிக்கொண்டு, பாம்பையும் எலும்பையும் அணிந்துகொண்டு, புலியையும் சிங்கத்தையும் பக்கத்தில் வைத்துக்கொண்டு, "பார்ப்பானா? பக்கத்தில் வா! பறையனா? தூரப் போ!" என்று கூறும் ஒரு கடவுளன்றோ நம்முன் காட்சியளிக்கின்றது! அது மட்டுமா? ஆறுகாலப் பூசையும்—அதற்கு நூறுவித ஆகமங்களும்—அவற்றை ஓத நூலணிந்த பார்ப்பனருமே உரியர் என்று கூறும் கடவுளன்றோ நம்முடைய கடவுளாகப் பேசப்படுகின்றது! இத்துடனாவது விட்டுவிடுகிறாரா என்றால், அதுவும் இல்லையே! "அடியவரே! நீ என்னிடத்தில் அன்பு கொண்டுள்ளமை உண்மையானால், உன்னுடைய மனைவியை எனக்குத்தா! உன்னுடைய பிள்ளையைக் கறி சமைத்துச் சோறிடு! உன்னுடைய பெண்ணின் கூந்தலை என் பஞ்சவடிக்குக் கொடு! மண்டையைப் பாறையில் மோது! கையைக் கல்லில் தேய்! மூக்கை அறு! நாக்கைப் பிடுங்கு! பால்மணம் மாறாப் பச்சிளங் குழந்தையைப் பதைக்கப் பதைக்கக் கொல்! மழுவால் வெட்டு! கழுவில் ஏற்று! சூதாடு! திருடு! தாலியறு!" என்ற இன்னபிற தகாத—செய்யக்கூடாத செயல்களைச் செய்யும்படி ஆணையிடும் ஆண்டவனன்றோ நம்மை ஆதரிக்கும் 'அருள்வள்ள'லாகப் பேசப்படுகின்றான்! இப்படிப்பட்ட ஒரு கடவுள்தான் நமக்கு வேண்டுமா? என்பதனை, எம்மீது சீற்றங்கொள்வோர் இனிமேலாவது எண்ணிப் பார்க்கவேண்டுகிறேன்.

**இனி,** ஆகம முறைப்படி குடுமித்தேவருக்குப் பூசை செய்ததாகப் பேசப்படும் சிவகோசரியார் என்ற பார்ப்பனர், அந்தத் தேவனுக்கு இறைச்சி முதலிய தகாத உணவுகளைப் படைத்தவர் யாரென்று தெரியாமல், "இங்கே வெந்த இறைச்சியையும் எலும்பையும் இறைவனுக்குப் படைத்தவர் யாவர்? தேவதேவன் திருவுள்ளமும் இதற்கு இசைந்ததோ" என்று அங்கலாய்த்து அவதிப்பட்டதாகவும் கூறப்படுகின்றது. சிவகோசரியார் இந்த வேதனையை ஏன் வளர்த்துக்கொண்டாரோ தெரியவில்லை! ஒருநாள் இரண்டுநாளல்ல; ஆறுநாட்கள் இவ்விதம் நடந்திருக்கிறது. ஒருநாளாவது அவர் அங்கே தங்கியிருந்து, யார் அந்த அடாத செயலைச் செய்கின்றார்கள் என்று பார்த்திருக்கலாம். ஒருவேளை நேரில் இருந்து பார்ப்பதற்கு அச்சப்பட்டால்-அதனைச்செய்பவனால் தனக்கு யாதாயினும் தீங்கு நேரிட்டுவிடுமோ என்று அஞ்சினால்-எங்காவது மறைவாக இருந்து பார்த்திருக்கலாம். ஆறுநாட்களுக்குப் பிறகு ஆண்டவனிடம் முறையிடுகிறார்! ஆண்டவன், "எனக்குப் பின்னால் மறைந்திருந்து பார்" என்று கூறுகிறார் என்பதாகவன்றோ புராணத்தில் காணப்படுகின்றது. ஏன் இந்த நிலை ஏற்பட்டது? திண்ணனார், தம்மிடத்துக் கொண்டுள்ள அளவு கடந்த அன்புப் பெருக்கைச் சிவகோசரியாருக்குக் காட்டவே சிவன் அங்ஙனம் செய்தார் என்றால், அதற்கு ஆறு நாட்கள் ஏன்? எல்லாம்வல்ல சிவனுக்கு, ஒருவனுடைய அன்பை அளந்தறிய ஆறு நாட்கள் வேண்டுமா? அரை விநாடியில் அனைத்தையும் அறிந்துகொள்ளும் ஆற்றல் பெற்றவராகப் பேசப்படும் ஆண்டவனுக்குத், திண்ணனாரின் அன்பை அளந்தறிய ஆறு நாட்களாயின என்று கூறுவது, ஆண்டவனுக்கே இழுக்கை உண்டாக்கும் ஒரு செயல் என்பதாகச் சைவ மெய்யன்பர்களே கருதிச் சோகப்படுவர்.

இனித், திண்ணனாரின் அன்பைச் சிவகோசரியாருக்குக் காட்ட விரும்பிய காளத்தியப்பர், தம்முடைய வலக்கண்ணினின்றும் குருதி (இரத்தம்) பெருகும்படி செய்தார் என்றும் கூறப்படுகின்றது. ஒரு உடம்பில் குருதி வரவேண்டுமானால், அவ்வுடம்பு, கருவிலுருவாகிவந்த உயிருள்ள உடம்பாய் இருத்தல் வேண்டும். அப்பொழுதுதான் அவ்வுடம்பினிடத்துக் குருதியைக் காணமுடியும். உயிரற்ற கல்லிலும், செம்பிலும், கட்டையிலும் குருதி வந்தது—வரச்செய்ய முடியும் என்பது கருத்துக் குருடர்களாலும் ஒப்புக்கொள்ளமுடியாத ஒரு கற்பனையாகும். ஆனால், திண்ணனாரின் அன்பைச் சோதிக்க எண்ணிய சிவன், உடனே, கல் — செம்பு — கட்டை வடிவங்களை விட்டு, உண்மையான உயிர்வடிவங் கொண்டு, "அன்பனே, திண்ணனாரே! என்னுடைய கண்ணில் குருதி வருகின்றது, இதனை நீ தடுத்தல் வேண்டும்" என்று கூறினார் என்பதாகவாவது புராணத்தில் கூறப்பட்டிருந்தால், அதனை ஒருவாறு ஒப்புக்கொள்ள முடியுமேயன்றிக், கடவுள் வடிவம் இதுதான் என்று கருதிச் செதுக்கப்பட்ட ஒரு கட்டையினின்றும் குருதி வெளிப்பட்டதென்பது, கடவுள் ஒருவர் உண்டென்னும் கற்பனையையும் கடந்து நிற்கும் ஒரு வடிகட்டிய கற்பனையாகும்.

இனிக், "கடவுளின் திருவருளால் உயிரற்ற கட்டையிலும் குருதி வரும்" என்றால், அதனைக் கடவுளின் திருவருள் என்று கூறுவது கடவுளையே கேலிசெய்வது போலாகும். எப்படியென்றால், இன்று, நாடகங்களிலும், படக் காட்சிகளிலும், ஒரு உடம்பில் வெட்டின்றிக்—குத்தின்றிக் குருதி வரும் காட்சியை மிகவும் அற்புதமாகச் செய்து காட்டுகின்றார்கள். இதற்கும், கடவுளின் திருவருளால் உயிரற்ற கட்டையில் குருதி வருவதற்கும் யாதாயினும் வேறுபாடு காண முடியுமா? இதற்குப் பேர் கடவுளின் திருவிளையாடல் என்றால், கடவுளன்பர்களே ஒப்புக்கொள்ள மாட்டார்கள். அது மட்டுமல்லக், கடவுளின் திருவருளை எவ்வளவு கீழ்த்தரமான முறையில்—நாடக முறையில் நையாண்டி செய்யப்படுகின்றதென்றும் கடிவர்.

இனிக், காளத்தியப்பரின் கண்ணில் குருதி வடிவதைக் கண்ட திண்ணனார், "இத்தீங்கு யாரால் நேரிட்டதோ? எமக்கு மாறுபட்ட வேடர்கள் தான் இதனைச் செய்தாரோ? அன்றி விலங்குகளால் தான் இத்தீங்கு நேரிட்டதோ? என்று அச்சமும் சினமுங்கொண்டு, அம்பை எடுத்து வில்லில் தொடுத்து, அங்குமிங்கும் ஓடியோடித்—தேடித்

தேடிப் பார்த்தார் என்று கூறப்படுகின்றது. காளத்தியப்பரின் கண்ணைப் புண்ணாக்கிய வரைக் காணத் தவித்துக் காடு மலை எல்லாம் தாவிய திண்ணனார் கண்ணுக்கு யாரும் புலப்படவில்லையாம். எப்படிப் புலப்பட முடியும்? தம்கண்ணைத் தாமே புண்ணாக்கிக் கொண்ட கண்ணுதலார் (சிவன்) திண்ணனாரின் முன்நிற்க, அவரைவிட்டு, அவருக்குத் தீங்கு செய்தவர் வேறொருவராய் இருக்கலாமோ என்று கருதிக் காடுமலை எல்லாம் தேடிப்பார்த்தால் எப்படிக் கிடைப்பர்! திண்ணனார், இங்ஙனம் தேடி அலைந்தார் என்பது ஒருவியப்பிற்குரிய செயலன்று; அது இயற்கையுங்கூட. ஆனால் இவ்வளவு தொலைவு தேடிய திண்ணனார் கண்ணுக்குத், திருக் காளத்தியப்பருக்குப் பின்பக்கத்தில் நின்று கொண்டு, திண்ணனாரால் செய்யப்படும் அன்புப் பெருக்கை அளந்தறியும் ஆவலோடு எட்டியெட்டிப் பார்த்துக் கொண்டு நின்றதாகச் சொல்லப்படும் ஆகமச் சிவகோசரியார் புலப்படவில்லையே என்பது தான் வியப்பிற்குரிய ஒன்றாகும். காளத்தியப்பரின் கண்ணுக்குத் தீங்கு செய்தாரைத் தேடினார் திண்ணனார் என்பது உண்மையானால், அவருடைய கண்களுக்குச் சிவகோசரியார் புலப்பட்டே இருப்பார். ஒரு வீட்டில் உள்ள பொருள் திருடப்பட்டுவிட்டதென்றால், திருட்டுக் கொடுத்தவர்கள், முதலில் அந்தப் பொருள் இருந்த இடத்தில், அந்தத் திருடன் எங்காவது ஒளிந்திருக்கின்றானா என்று பார்ப்பர். பின்னர், பக்கத்திலுள்ள அறைகளைப் பார்ப்பர். அதற்குப் பின்னர் வீட்டைச் சுற்றிலும் தேடிப்பார்ப்பர். அதற்குப் பின்னர், தெருவிலும் பிற இடங்களிலும் தேடிப் பார்ப்பர். அல்லது அந்த வீட்டில் ஆட்கள் மிகுதியாய் இருந்தால், ஒரே சமயத்தில், எல்லா இடங்களையும் பார்ப்பர். இது போலவே, திண்ணனாரும், தம்முடைய சிவனாருக்குத் தீங்கு செய்தாரைத் தேடினார் என்றால், முதலில் சிவனைச் சுற்றி, அவருக்கு அண்மையில் யாராவது இருக்கின்றார்களா என்று பார்த்த பின்னரே, காடுமலை எல்லாம் தேடிப் பார்க்கும் காரியத்தில் ஈடுபட்டிருப்பார். அதிலும், சிவனாருடைய கண்ணில் குருதி வடிந்து கொண்டிருக்கும் சமயத்திலேயே திண்ணனார் அங்கு வந்திருக்கிறார். "சிவனுடைய கண்ணில் குருதி வடிந்தபடி இருக்கிறது; இப்பொழுதுதான் இக்கொடுமையினை யாரோ செய்திருத்தல் வேண்டும்; அப்படிச் செய்தவர்கள் இதற்குள் தொலைவாகப் போயிருக்கமுடியாது; அண்மையில் எங்காவதுதான் இருப்பர்" என்று எண்ணி, முதலில், சிவன் இருக்கும் இடத்தைச் சுற்றியே துருவித் துருவித் தேடிப் பார்த்திருப்பார். அப்படித் தேடியிருந்தால், திருக்காளத்தியப்பருக்குப் பின்பக்கத்தில் நின்றுகொண்டிருந்த சிவகோசரியார் திண்ணனாரின் கண்களுக்குப் புலப்பட்டே இருப்பார். அப்படிப் புலப்பட்டதாகச் சேக்கிழார் கூறாததால், சிவனாரின் கண்ணில் குருதி வருவதைக் கண்ட திண்ணனார்,

"......இம்மலையிடை எனக்கு
மாறு, மீளி வெம்மறவர் செய்
தார்கொலோ விலங்கின் சாதி,
ஆளி முன்னாகி விளைத்தவோ
அறியேன்........"

என்று எண்ணி,

"நீளிருங் குன்றைச் சாரல்
நெடிதிடை தேடிச் சென்றார்"

என்பதாகச் சேக்கிழார் கூறியிருப்பதை மட்டும் உண்மையென எப்படி ஒப்புக்கொள்ள முடியும்?

இனிக், கடவுளின்கண்ணில்குருதி வருவதைக் கண்ட திண்ணனார், தம்முடைய கண்ணை அம்பால் அகழ்ந்தெடுத்து அப்பினார் என்றும், உடனே குருதி வருவது நின்றுவிட்டதென்றும் கூறப்படுகின்றது. ஒரு கண்ணில் குருதி வருவதைத் தடுக்கவேண்டுமானால், குருதி வருவதன் காரணத்தை அறிந்து, அதற்குரிய மருந்தை இட்டாலன்றிக், குருதி வருவதைத் தடைசெய்ய முடியாது. அதிலும், கைதேர்ந்த மருத்துவ வல்லுனரேயன்றி, மற்றையோர் இந்நோயை, அதிலும் உடம்பின் முக்கிய உறுப்பான கண் நோயைத் தீர்ப்பதென்பது எளிதில் முடியக் கூடிய காரியமன்று, ஆனால், இங்கே பேசப்படும் திண்ணனார் மிக எளிதாக அந்நோயைத் தீர்த்துவிட்டதாகச் சொல்லப்படுகின்றது. "ஊனுக்கு ஊன்" என்ற பழமொழி அவருடைய நினைவுக்கு வந்ததாம். உடனே "கண்ணுக்குக் கண்" என்ற புதுமொழியை உண்டாக்கித், தன்னுடைய கண்ணை இடந்து, குருதி பெருகும் சிவனாரின் கண்ணில் அப்ப, அந்நோய் அப்பவே தீர்ந்துவிட்டதாம்! என்ன அற்புதமான மருத்துவ முறை! இன்றைய விஞ்ஞானிகளால்கூடக் கண்டுபிடிக்க முடியாத அளவு சிறந்த மருத்துவ முறையை —அறிவை, "எல்லாம் வல்ல இறைவனார் காட்டிலே தனியே இருக்கின்றார்; அவருக்குக் காட்டு விலங்குகளால் யாதாயினும் தீங்கு நேரிடக் கூடும் என்று அஞ்சித், துஞ்சாது காவல்புரிய வேண்டுமென்ற 'சிறந்த அறிவை'ப் பெற்றிருந்த திண்ணனார் பெற்றிருந்தார் என்றால், இதனினும் வியப்பான செய்தி வேறொன்றுளதோ! இனித், தம்முடைய கண்ணை அகழ்ந்தப்பிய திண்ணனார், சிவனாரின் குருதி வடியும் கண்ணை எடுத்துவிட்டு, அந்த இடத்தில் தம்முடைய கண்ணை அப்பினாரா, அல்லதுகுருதி வடியும் கண்ணிலேயே, அகழ்ந்தெடுத்ததால் குருதி வடியும் தம்முடைய கண்ணை வைத்து அப்பினாரா என்பதும் தெரியவில்லை.

இனி, இவை எல்லாம் முறுகிய அன்பின் மேலீட்டால் செய்யப்படும் காரியங்கள்; இவற்றில் குறை காண்பதும்—குற்றம் கற்பிப்பதும் அறிவுடைமையாகதென்றும் சிலர் கூறக்கூடும். அன்பின் மேலீட்டால் செய்யப்படும் காரியங்களை அறிவோடு தொடர்பு படுத்தி ஆராய்வது குற்றமென்றால், மக்களாய்ப் பிறந்தார் எல்லாருக்குமே திண்ணனாருக்கு இருந்தது போன்ற அன்பு மட்டும் இருந்தால் போதுமே! அறிவைப் பெறும் கல்வியையும், அதனால் நலந்தீங்கை அறியும் ஆராய்ச்சி உணர்வையும் மக்கள் ஏன் வறிதேபெறுதல் வேண்டும்? அறிவை அடகு வைக்கும் அன்பு நிலையை வளர்த்ததாலன்றோ இன்றும் நம்நாடு பிறரால் எள்ளி நகையாடப்படும் இழி நிலையில் இருக்கின்றது! "அன்பே சிவம்" என்று கூறிய திருமூலர்மொழிஉண்மையா? அன்றி, "அறிவே கடவுள்" என்று கூறிய தாயுமானவர் மொழி உண்மையா? என்பதனை ஆராய்ந்து முடிவு காணும் அளவுக்குத் தங்கள் ஆராய்ச்சி உணர்வைப் பெருக்கிக் கொண்டுள்ள மக்கள் வாழும் இந்நாளில், "அன்பு நிலையில் இருப்போருடைய செயல்களைத் தம் மதியால் ஆராய்ந்து முடிவு காணப் புகுவது அறிவுடைமையாகாது" என்று அரற்றும் 'அன்பர்'களும் இருக்கின்றனர் என்றால் அதனை எப்படிப் பொறுத்துக் கொண்டிருக்க முடியும்?

✱

# ◎ அறிவியல் வளர்ச்சி ◎

[இரா. நெடுஞ்செழியன்]

அறிவியல் (Science) அணுவின் ஆற்றலைக்கண்டுபிடிக்கும் அளவிற்கு வளர்ந்தோங்கி வந்திருக்கிறது. மனித அறிவுக்குப் புலப்படாமலிருந்த இயற்கையின் உண்மைத் தோற்றத்தைப் படிப்படியாக அறிமுகப் படுத்திவருவது அறிவியலாகும். அறிவியலின் துணையால்தான் காட்டுமிராண்டி வாழ்க்கை, நாகரிக நிலைக்குநகர்ந்திருக்கிறது. அறிவியல் அறிமுகப்படுத்திவைத்த உண்மைகள் சில; அறிமுகப்படுத்தவேண்டிய உண்மைகள் பல இருக்கின்றன. அறிவியலின் பயணம் தொடர்ந்து நடந்துகொண்டே தான் இருக்கும். இத்தகைய அறிவியலின் துணையின்றி, நாகரிக உலகம் முன்னேற்றப் பாதையிலே சுழன்று வந்திருக்க முடியாது.

அறிவு வளர்ச்சியின் விளைவு அறிவியல்! அது சிந்திக்கும் மனிதரின் முயற்சியால் உருப்பெறுவது! அந்த அறிவியலைப் பழித்துக் கூறுவதன் மூலமாகத் தம் அறிவு மேம்பாட்டை விளக்கிக் காட்டிக்கொள்வதாகக் கருதுவோர்சிலர் இந்நாளிலும் வாழக்காண்கிறோம். அறிவியலை வெறுப்பதன் காரணமாகப் பழமையைக் காப்பாற்றிவிட்டதாக அவர்கள் எண்ணிக்கொள்கிறார்கள். இத்தகைய பழமை விரும்பிகள், அறிவியலின் பயனைநுகராமல் இருக்கிறார்களா என்றால் இல்லை! அவர்களுக்குப் பழமையின் மீது ஒருவித மோகம்! பழைமையைக் காப்பாற்ற வேண்டுமென்றால் புதுமையைத் தோன்றாமல் செய்யவேண்டிய பொறுப்பு பழமை விரும்பிகளைச் சார்கிறது. அறிவியல், அறியாமையைப் போக்கி, புதுமையை விளக்கி வருவதால், அது ஒழிக்கப்படவேண்டும் என்று அவர்கள்கருதுகிறார்கள். இத்தகையோர் ஏனைய நாடுகளைக் காட்டிலும் இந்தியாவில், குறிப்பாக நம்நாட்டில், அதிகமாக இருப்பதால் தான் மக்களின் வாழ்க்கைத்தரம் உயராமல் இன்னும் இழிந்த நிலையிலேயே இருந்து வருகிறது.

அண்மையில், கோவை நகரில் நடைபெற்ற மாகாண மருத்துவ சங்க மாநாட்டைத், திறந்துவைத்துச் சொற்பொழிவாற்றிய பேரறிஞரான சர். சி. வி. இராமன், அறிவியல் அறிஞர்கள் தற்காலத்திய ஆராய்ச்சிகளை எடுத்துக் கொண்டு மேன்மேலும் பெருக்கவேண்டுமேயல்லாமல், நமது பழம் பெருமைகளை நினைத்துக் கொண்டிருத்தல் கூடாது என்றும், மனித சமுதாயம் முன்னேற்ற மடைந்து வருகிறதென்றும், அறிவியல் ஆராய்ச்சி உலக நன்மையை முன்னிட்டுக் கண்டுபிடிக்கப்படுகிறது என்றும், நாம் முன்னேற வேண்டுமானால் நாம் நமது மனப்பான்மையை மாற்றிக்கொள்ள வேண்டும் என்றும், நாம் பழமையிலேயே எல்லா அறிவும் பொதிந்து கிடக்கிறது என்று எண்ணுவது தவறு என்றும் நாம் நன்கு உழைக்க வேண்டும் என்றும் நன்கு விளக்கியுள்ளார். சர். சி. வி. இராமன் நோபல் பரிசு பெற்ற சிறந்த அறிவியல் அறிஞர். அவர் வருந்திக் கூறுகிறார், நமக்கு புதுமை வழியே செல்ல எண்ணம் ஏற்படாவிட்டால், மனித சமுதாயம் முன்னேற்றப் பாதையிலேசிறிதளவுகூடச்செல்லமுடியாது என்பதை வற்புறுத்திக்கூறியுள்ளார். அந்தச் சொற்பொழிவில் மேலும் கூறும்போது அறிவியல் ஆராய்ச்சிகளைக் குறைத்து மதிப்பிடும் குறைமதிபடைத்தோர் இந்த நாட்களிலும் இருக்கிறார்கள் என்றும் அந்த நிலை அடியோடு மாறவேண்டும் என்றும் கூறியுள்ளார்.

சக்கிமுக்கிக் கற்களை ஒன்றோடொன்று உராய்ந்து அதிலிருந்து தீப்பொறியினைப் பெறக்கற்றுக் கொண்ட காட்டுமிராண்டிக் காலத்திலிருந்து, அணுவின் ஆற்றலைக் கண்டு பிடித்த இக்காலம் வரையிலும் அறிவியல் பழமையோடு பல போராட்டங்கள் நடத்தியேவளர்ந்து வந்திருக்கிறது. பழமைக்கும் அறிவியலுக்கும் போராட்டங்கள் பல ஏற்பட்டன என்றாலும் ஒவ்வொரு போராட்டத்திலும் அறிவியலே வெற்றி பெற்றிருக்கிறது. அதுதான் வெற்றி பெறமுடியும். அறிவியலின் பயணம் வேண்டுமென்றால்ஆங்காங்கு தடைப்படுத்தப் பட்டிருக்கலாமேயொழிய, காலம் அதிகமாகக் கழியலாமேயொழிய பயணம் முடிந்துவிடாமல் நடந்துக் கொண்டேதான் இருக்கிறது.

மனித வாழ்க்கைக்கு இன்றியமையாது வேண்டப்படுவனவாகிய உழவுத் தொழிலும், மருத்துவமும் அறிவியலின் துணையினால் மிக உயர்ந்த நிலைக்கு வளர்ந்து வந்திருக்கின்றன. ஏனைய துறைகளிலும் வசதிகளைப் பெருக்கிக் கொண்டு இன்ப வாழ்வு நடத்தப் பெரிதும் துணை புரிந்து வருவது அறவியலேயாகும். இயற்கைப் பொருள்களின் (Physics) தத்துவங்களை விளக்கி, கலவைப் பொருள்களின் (Chemistry) பண்புகளை எடுத்துக்காட்டி, மனிதனின் உடற் கூறுபாடுகளை (Physiology) பிரித்துப் பிரித்து உணர்த்தி, மற்ற உயிர் வகைகளின் தன்மைகளை (Biology) யெல்லாம் அறிவுறுத்தி, மரவகைகளின் பண்புகளை (Botany) யெல்லாம் தெளிவுபடுத்தி மனிதன் தன் வாழ்க்கையை ஏற்றவண்ணம் அமைத்துக்கொள்ள அறிவியல் அரும்பாடுபட்டு வருகிறது. மனிதன் வாழ்வின் குறிக்கோளாகிய இன்பத்தை எளிதில் பெறவேண்டிய வசதிகளை யெல்லாம் அறிவியல் செய்து தருகிறது. மனிதன் காணும் கனவுகளை யெல்லாம் நனவாக்கிக் காட்டுகிறது. போர்க் காலங்களில் அறிவியல் தீமை பயக்கும் பயங்கர படைகளை உண்டாக்கித் தருகிறது என்று குற்றஞ் சாட்டி, அதனை வெறுக்கத் தலைப்படுகிறார்கள் சிலர். தீமைக்குப் பயன்படும் ஆயுதங்களை செய்யும் வழியை அறிவியல் சொல்லிக்கொடுக்குமே யொழிய, ஆயுதங்களைச் செய்யச் சொல்லாது. நன்மைக்கும், தீமைக்கும் பயன்படுத்துவது மனிதனுடைய மனப்போக்கைச் சேர்ந்தது குற்றம் மனிதனுடையது; அறிவியலுடையது அல்ல.

மருத்துவத்துறையில் அறிவியல் சாதித்திருக்கும் வெற்றிகளைச், சர். சி. வி. இராமன் குறிப்பிடும் போது, மக்களைக் கொல்லும் கொடிய பகைவர்கள் மக்கள் அல்ல; உண்மையில் சிறு, சிறு கிருமிகளே மக்களுக்குத் தீராப்பகைவர்களாக விளங்குகிறார்கள், பார்முழுதும் கட்டி ஆளும்

(2-ம் பக்கம் பார்க்க)

Edited Printed Published by C. N. Annadurai, M. A., at "Dravida Nadu" Press, 317—319 Hodgsonpet Conjeeveram.